விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 142 வள்ளுவர் ஆண்டு 2055 சித்திரை 26 வியாழக்கிழமை (09.05.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829





## இரட்டை குடியுரிமை பெற்றதால்
# எம்.பி பதவியை இழந்தார் டயானா கமகே



(கொழும்பு)

இரட்டைக் குடியுரிமையைப் பெற்றுள்ளதால் இராஜாங்க அமைச்சர் டயானா கமகே பாராளு மன்ற உறுப்பினர் பதவியை வகிக்க தகுதி யற்றவர் என உச்ச நீதிமன்றம் அறி வித்துள்ளது. *(05ஆம் பக்கம் பார்க்க)*

## ஐ.பி.எல்லில் அறிமுகமானார்
# யாழைச் சேர்ந்த வியாஸ்காந்த்




(ஹைதராபாத்)

இந்தியன் பிறீமியர் லீக்கில் (ஐ.பி.எல்) யாழ்ப் பாணத்தைச் சேர்ந்த சுழற்பந்துவீச்சாளரான விஜயகாந்த் வியாஸ்காந்த் அறிமுகத்தை மேற் கொண்டுள்ளார்.

ஹைதராபாத்தில் நேற்று நடைபெற்ற லக்னோ சுப்பர்ஜெயண்ட்ஸுக்கெதிரான போட்டியிலேயே சன் ரைசர்ஸ் ஹைதராதபாத் அணிக்காகவே 22 வயதான வியாஸ்காந்த் அறிமுகத்தை 15

## போர் முடிவடைந்த பின்னரும்
# தமிழ் மக்கள் மீது
# தொடரும் சித்திரவதை
## மனித உரிமைக் குழு அறிக்கை

*(லண்டன்)*

***இலங்கையில் போர் முடிவடைந்த பின்னரும் தமிழர்கள் மீதான சித்திரவதை தொடர்கின்றது என மனித உரிமைக் குழு தமது புதிய அறிக்கையில் தெரிவித்துள்ளது.***

இலங்கையில் நடந்ததாகக் கூறப்படும் துஷ்பிரயோகங்களை ஆவணப்படுத்தி வரும் லண் டனைத் தளமாகக் கொண்ட சர்வ தேச உண்மை மற்றும் நீதித் திட்டம் (ITJP) தனது அறிக்கை யில், 2015க்கும் - 2022க்கும் இடையில் இலங்கை அதிகாரி களால் தாக்கப்பட்டதாகவும், எரிக்கப்பட்டதாகவும் மற்றும் தகாத முறைக்கு ஆளானதாக வும் கூறிய 123 தமிழர்களின் விப ரங்களை வெளியிட்டுள்ளது.

2022ஆம் ஆண்டு ஜூலை மாதம் இலங்கை 16

## யாழ்.வேலணையில்
# 5 மிதிவெடிகள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் , வேலணை - சரவணை மேற்கு பகுதியில் உள்ள காணி ஒன்றில் இருந்து 5 மிதிவெடிகள் மீட்கப்பட்டுள்ளன.

காணி ஒன்றில் மிதிவெடிகள் காணப்படுவதாக ஊர்காவற்றுறை பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற தகவலின் அடிப்படையில், குறித்த காணிக் குச் சென்ற பொலிஸார் மிதிவெடிகளை மீட்டுள்ளனர். 15

## ஸ்ரீ லங்கன் ஏர்லைன்ஸால்
# 10 வருடங்களில் ரூ.45,790 கோடி நஷ்டம்

(கொழும்பு)

ஸ்ரீ லங்கன் ஏர்லைன்ஸ் நிறுவனம் கடந்த பத்து வருடங்களில் (2014-2024) நாற்பத்தி ஐந்தாயிரத்து எழுநூற்று தொண்ணூறு கோடி ரூபாயுக்கும் அதிகமான நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக பிரதமர் தினேஷ் குணவர்தன நேற்று பாராளு மன்றத்தில் தெரிவித்தார். 15

## நான்கு கட்டங்களின் கீழ்
# வாகனங்களை இறக்குமதி செய்வது தொடர்பில் அவதானம்
## நிதி இராஜாங்க அமைச்சர்

(கொழும்பு)

நான்கு கட்டங்களின் கீழ் வாகனங்களை இறக்குமதி செய்வது தொடர்பில் அரசாங் கம் அவதானம் செலுத்தி யுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய 15

## ஏற்றுமதி, பசுமைப் பொருளாதாரமே
# இலங்கையின் இலக்காகும்
## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு




(கொழும்பு)

போட்டிமிக்க ஏற்றுமதி சார்ந்த பொருளாதாரம் மாத்திரமன்றி, நிகர பூஜ்ஜிய உமிழ்வை நெருங்கும் பசுமைப் பொருளாதாரமும் இலங்கை யின் இலக்கு என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித் தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் ஆரம்ப 15

## யுத்த அத்துமீறல்களுக்கு
# உள்ளகப் பொறிமுறையால் நீதி கிடைக்காது - சுமந்திரன் எம்.பி



(கொழும்பு)

யுத்த அத்துமீறல் குற்றச்சாட்டுக் களுக்கு உள்ளக பொறிமுறை மூலமாக சரியான நீதி கிடைக்காது என்பதற்கு யுத்தம் முடிவடைந்த இந்த 15 வருட காலமாக எதுவுமே நடக்காமல் இருப் பதே சான்றாக உள்ளது என்று பாராளுமன்ற உறுப்பின ரான 'எம்.ஏ.சுமந்திரன் 15

## காலியில் துப்பாக்கிச் சூடு ஒருவர் பலி

(காலி)

காலி அஹுங்கல - போக ஹபிட்டிய பகுதியில் நடத்தப் பட்ட துப்பாக்கி பிரயோகத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த துப்பாக்கி பிரயோகம் நேற்று மாலை நடத்தப்பட் டுள்ளதாகப் பொலி ஸார் தெரிவித்தனர். 16

## கடன் மறுசீரமைப்பால்
# இலங்கையின் கடன் சுமையை குறைக்க முடியும் - அலி சப்ரி




(கொழும்பு)

வெளிநாட்டு கடன் மறு சீரமைப்பு செயல் முறையை ஜூன் மாதத்திற்குள் நிறைவு செய்ய அரசாங்கம் எதிர்பார்ப்பதாக வும், முழுமையான கடன் மறுசீர மைப்புப் பணிகள் வெற்றிகர மாக முன்னெடுப்ப தன் மூலம் இலங்கை 16

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறாது நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# யாழ். பல்கலையின் மகப்பேற்று, பெண்நோயியல் துறையின் விழிப்புணர்வு செயலமர்வு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழக மகப்பேற்று மற்றும் பெண்நோயியல் மருத்துவத் துறையும் சமூக மருத்துவ துறையும் இணைந்து செயற்படுத்தி வரும் இனப்பெருக்க சுகாதாரம் தொடர்பான செயற்றிட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்டு பயிற்றுவிக்கப்பட்ட சமூக சுகாதார உதவியாளர்களால் நல்லூர் பிரதேச செயலக மகளிர் அபிவிருத்தி நிலைய மாணவர்களுக்கான குடும்ப சுகாதாரம் தொடர்பிலான விழிப்புணர்வு செயலமர்வு கடந்த 07.05.2024 அன்று நல்லூர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இச் செயலமர்வில் இனப்பெருக்க சுகாதாரம்,இளவயது திருமணம் பால் நிலை வன்முறை, குழந்தைப்பேறுக்கு பின்னரான சுகாதாரம் போன்ற விடயங்கள் தொடர்பில் பயிற்றுனர்களால் கருத்துரைகள், பயிற்சிகள் மற்றும் மகிழ்வூட்டல் செயற்பாடுகள் முன்னேடுக்கப்பட்டது.

கடந்த ஒன்றரை வருடமாக செயல்படுத்தப்பட்டு வரும் இச் செயற்பாட்டுக்கான நிதி அனுசரணையை சர்வதேச மருத்துவ நிறுவனமான ஐ.எம்.எச்.ஓ. (IMHO) நிறுவனம் வழங்கி வருகின்றது. (ம-7,10)

# டயானா வெற்றிடத்துக்கு எம்.பியாகிறார் முஜிபுர்

(கொழும்பு)

டயானா கமகே எம்.பி.யாகச் செயல்பட முடியாது என்ற உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் விளைவாக வெற்றிடமான தேசியப் பட்டியல் இடத்துக்கு யாரை நிரப்புவது என்பது குறித்து விரைவில் விவாதம் நடத்த சமகி ஜன பலவேகய (SJB) திட்டமிட்டுள்ளது. லங்கா கட்சியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார இன்று தெரிவித்தார்.

இந்த விவகாரம் குறித்து முடிவு செய்ய நாங்கள் விரைவில் கூடுவோம்" என்று தெரிவித் தார்.

"முன்னதாக நடைபெறவிருந்த உள்ளூராட்சி தேர்தலில் கொழும்பு மாநகர சபைக்கான SJB மேயர் வேட்பாளராக முஜிபுர் ரஹ்மான் களமிறக்க நாங்கள் எடுத்த தீர்மானத்தின் காரணமாக முஜிபுர் ரஹ்மான் தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இழந்தார். டயானா கமகேவுக்குப் பதிலாக யாரை நியமிப்பது என்பதை தீர்மானிக்கும் போது இந்த உண்மையை நாங்கள் கருத்தில் கொள்வோம்" என்று அவர் மேலும் கூறினார்.

மேலும், இராஜாங்க அமைச்சர் கமகே தொடர்பில் உச்ச நீதிமன்றம் ஒரு முக்கிய தீர்ப்பை வழங்கியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (ம-7,10)

## சேவை மூப்பு அடிப்படையில்
# இலங்கை கல்வி நிர்வாக சேவை வடபகுதியில் 8 பேர் தெரிவு

(யாழ்ப்பாணம்)

இலங்கை கல்வி நிர்வாக சேவையில் மூப்பு அடிப்படையில் நாடு முழுவதிலுமாக 23 தமிழர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதில் வடபகுதியைச் சேர்ந்த 8 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களின் விபரம் வருமாறு,

மகாலிங்கம் ஞானசம்பந்தன் (யாழ்ப்பாணம்), செல்லையா இளங்கோ (யாழ்ப்பாணம்), நாகலிங்கம் சிவநேசன்(இணுவில்), லலிதாமலர் முகுந்தன் (சாவகச்சேரி), சிறிதரன் பாலராணி (பருத்தித்துறை), வல்லிபுரம் நடராசா(வரணி), பஞ்சாட்சரம் கணேசன்(உரும்பிராய்) மேலும் மன்னார் பாலாவியில் முகமட் ஸ்மயில், முகமட் நவுஸாட் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ம)

# பாஸ்மதி அரிசிக்கு மாற்றீடாக 2 புதிய நெல் வகைகள்

(கொழும்பு)

பத்தலகொட நெல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகம் பாஸ்மதி அரிசிக்கு மாற்றீடாக 2 மாற்று நெல் வகைகளை கண்டுபிடித்துள்ளது.


ஏ.ரி 306 மற்றும் ஏ.ரி 309 ஆகிய இந்த நெல் வகைகள் பாஸ்மதி அரிசியைப் போன்று நீளமானவை என விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

தற்போது சுற்றுலா மற்றும் விருந்தகங்களின் பயன்பாட்டிற்காக மாத்திரம் இந்தியா மற்றும் பாகிஸ்தானில் இருந்து பாஸ்மதி அரிசி இறக்குமதி செய்யப்படுகிறது.

எவ்வாறாயினும் இலங்கையில் இனங்காணப்பட்ட இந்த 2 மாற்று நெல் இனங்களுக்கு பயிர் விநியோகக் குழுவின் பரிந்துரை வழங்கப்படவுள்ளது.

குறித்த பரிந்துரையை அடுத்து எதிர்வரும் மாதங்களில் அவற்றை இலங்கையில் பயிரிடுவதற்காக விநியோகிக்க உள்ளதாக பத்தலகொட நெல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகம் தெரிவித்துள்ளது. (ம-7,10)

# மரண அறிவித்தல்



மலர்வு 15 - 06 - 1942

உதிர்வு 07 - 05 - 2024

## கிட்டிணபிள்ளை நாகராசா

அச்சுவேலி பத்தமேனியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கிட்டிணபிள்ளை நாகராசா அவர்கள் 07.05.2024 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிட்டிணபிள்ளை - பூரணம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சீனிக்குட்டி - தெய்வானை தம்பதியினரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற பாக்கியம்(பூபதி) அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கணேசமூர்த்தி, தனலட்சுமி மற்றும் பரமேஸ்வரி, இந்திராதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும் இராசலலிதா(இலங்கை), தர்மராசா(சுவிஸ்), செல்வகுமார்(பிரான்ஸ்), இராஜகுமாரி(கனடா), சுரேஸ்குமார்(கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற ஸ்ரீசத்தியநேசன் மற்றும் ஆனந்தகுமாரி, லிங்கவதி, ஜெயராசா, கீர்த்திகா ஆகியோரின் அன்பு மாமனாரும் கஜதர்சன், நிதர்சன், மதுர்சன், மதுசா, சர்மினா, கஜானா, சஸ்வினி, தாரகி, ஜஸ்வினி, லத்திகா, கவினேஷ் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான கனகம்மா, கந்தசாமி, பரமேஸ்வரி, சிவபாதம், பிரபாகரன் மற்றும் புவனேஸ்வரி, கமலராணி, நவரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை (10.05.2024) வெள்ளிக்கிழமை காலை 8.00 மணியளவில் அன்னரின் இல்லத்தில் இடம்பெற்று 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக பத்தமேனி தீர்த்தாங்குளம் உல்லிவிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்

(702)

## பொருளாதார நீதியை அடைவதற்காக
# சுகாதார தொழிற் சங்கங்கள் இன்றுமுதல் தொடர் வேலை நிறுத்தம்

பொருளாதார நீதியை அடைவதற்காக இன்று முதல் மீண்டும் தொடர்ச்சியான பணிப் பகிஷ்கரிப்பு நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சுகாதார தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

சுகாதார அமைச்சின் தொழிநுட்ப அறிக்கைக்கு அமைய கொடுப்பனவுகளை வழங்குவதாக உறுதியளித்ததன் காரணமாக பொருளாதார நீதிக்கான 4 மாதகாலப் போராட்டம் கடந்த ஏப்ரல் மாதம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டதாக கூட்டமைப்பின் இணை அழைப்பாளர் சானக்க தர்மவிக்ரம தெரிவித்துள்ளார்.

இருப்பினும், குறித்த வாக்குறுதி நிறைவேற்றப்படாத நிலையில், நேற்று முன்தினம் கூடிய தொழிற்சங்க பிரதிநிதிகளினால் மீண்டும் தொழிற்சங்க நடவடிக்கையை ஆரம்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி, மாகாணங்களில் உள்ள அனைத்து வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார நிலையங்களின் பணியாளர்கள் கடமையில் இருந்து விலகிச் செயற்படவுள்ளனர்.

இந்த தொழிற்சங்க நடவடிக்கைக்கு தீர்வு கிடைக்காத நிலையில், எதிர்வரும் 22 ஆம் திகதி முதல் மாகாணம் முழுவதும் பணிப் பகிஷ்கரிப்பு போராட்டத்தில் ஈடுபடுவதற்கும் தீர்மானிக்கக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், இன்று வடமத்திய மாகாணத்திலும், எதிர்வரும் 13 ஆம் திகதி மத்திய மாகாணத்திலும், 15 மற்றும் 16 ஆம் திகதிகளில் வடமேல் மற்றும் தென் மாகாணத்தில் இவ்வாறு பணிப் பகிஷ்கரிப்பு போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

அத்துடன், ஊவா மற்றும் மேல் மாகாணங்களில் எதிர்வரும் 20 மற்றும் 21 ஆம் திகதிகளில் பணிப்பகிஷ்கரிப்பு போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக சுகாதார தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. (ம-7,10)

# பொலிஸ் உத்தியோகத்தர் தொடரூந்து மோதியதில் மரணம்

(கொழும்பு)

மருதானை தொடரூந்து நிலையத்திற்கு அருகில் தொடரூந்தில் மோதி பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக மருதானை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவரது சடலம் மருதானை தொடரூந்து நிலையத்திற்கு அருகில் வைத்து கண்டுபிடிக்கப்பட்டதாக பொலிஸார் கூறியுள்ளனர்.

குடும்ப தகராறு காரணமாக இவர் உயிரை மாய்த்துக் கொண்டுள்ளதாக பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். மேலும் சம்பவம் தொடர்பான விசாரணைகளை மருதானை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாவலி எனும் பெயரில்

# தமிழர்களின் பூர்வீக நிலங்களை அபகரிக்காதே!

## வடக்கு ஆளுநர் செயலகம் முன் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

**மகாவலி அபிவிருத்தியின் பெயரால் மேற்கொள் ளப்படும் நில ஆக்கிரமிப்பை நிறுத்தக்கோரி கொக்கு தொடுவாய், கொக்கிளாய் மற்றும் கருநாட்டுக்கேணி பிரதேச மக்கள் யாழ்ப்பாணத்தில் போராட்டம் ஒன்றினை முன்னெடுத்தனர்.**

வட மாகாண ஆளுநர் செயலகத்திற்கு முன்பாக நேற்று புதன் கிழமை காலை 10 மணியளவில், குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதனையடுத்து அப்பகுதியில் பொலிஸார் குவிக்கப்பட்டு கண்காணிப்பு கடமையில் ஈடுபட்டிருந்தனர்.

மகாவலி எனும் பெயரில் தமிழர்களின் பூர்வீக காணிகளை அபகரிக்காது மகாவலி திட்டத்தை எமது மண்ணில் நிறுத்து, எமது வாழ்வாதாரத்தை பறிக்காதே, மகாவலி அபிவிருத்தி முல்லைத்தீவில் பௌத்தமயமாக்கலுக்கா, எமக்கு நீதி வேண்டும், என்ற பதாகைகள் தாங்கியவாறு மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தின் முடிவில் மகாவலி நில ஆக்கிரமிப்பு தொடர்பாக ஆளுநரின் செயலாளரிடம் மகஜர் கையளிக்கப்பட்டது.(நி-6-33)

## நீர் வழங்கல் வடிகாலமைப்பின் பொதுமுகாமையாளராக பாரதிதாசன்



(யாழ்ப்பாணம்)

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் பொது முகாமையாளராக யாழைச் சேர்ந்த ரி.பாரதிதாசன் நியமிக்கப்பட்டுள்ளார்.

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் பொது முகாமையாளர் பதவிக்கு நீண்ட காலம் கழித்து தமிழர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## பேருந்தில் தவறவிடப்பட்ட உடமைகளை சாலையில் ஒப்படைத்த காப்பாளர்

### யாழ்- பருத்தித்துறை சாலை காப்பாளரை பாராட்டும் மக்கள்


(யாழ்ப்பாணம்)

வெளிநாட்டவர் ஒருவரின் பெரும் தொகை பணம் அடங்கிய பையை கையளித்த பருத்தித்துறை பேருந்துக் காப்பாளரின் செயற்பாட்டினை பலரும் பாராட்டி வருகின்றனர்.

யாழ்.பருத்தித்துறைசாலையில் காப்பாளராக கடமையாற்றும் டீ.பாலமயூரன் என்பவர் கொழும்பிலிருந்து பருத்தித்துறை நோக்கி சேவைக் கடமையில் நேற்று முன்தினம் ஈடுபட்டிருந்த வேளை குறித்த பேருந்தில் வெளிநாட்டவர் ஒருவரினால் தவறவிடப்பட்ட பாஸ்போர்ட், 120,840 இலங்கை ரூபாய் பணம் மற்றும் 300 யூரோ பணத்தினை கண்டெடுத்து பருத்தித்துறை சாலையில் ஒப்படைத்துள்ளார்.

அத்துடன் இவர் 2021 ஆம் ஆண்டு மற்றுமொரு பயணி ஒருவரால் தவறவிடப்பட்ட இரண்டு இலட்சத்து ஐம்பது ஓராயிரம் ரூபாய் பணம் மற்றும் எழுபதாயிரம் ரூபாய் பெறுமதியான கைபேசி ஒன்றினையும் சாலை நிர்வாகத்திடம் ஒப்படைத்திருந் தமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## கண்ணீர் அஞ்சலி



யாழ்.எய்ட் நிறுவனத்தின் ஆரம்பகால வளர்ச்சிக்கு
பெரும் பங்காற்றிய எமது முன்னாள் பணியாளர்
சுசீலா அவர்களின் அன்புத் தாயார்

**அமரர். திருமதி வைத்தீஸ்வரன் ரஞ்சிமலர்**

அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதோடு அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி!!!

- யாழ்.எய்ட்

Yarl Aid

(சி-0315)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

அன்னை மடியில்
16 . 07 . 1987



இறைவன் அடியில்
21 . 04 . 2023

**அமரர். ஜெயந்திரன் நிஜந்தன்**

திதி-துதியை (09.05.2024)

புன்னகை பூத்த மலரொன்று
பூமியில் விதைக்கப்பட்ட நாள்
கள்ளமற்ற வளர்மழலை ஒன்று
காணாமல் போன நாள்
அமைதியான திருமுகம் ஒன்று
அனைவரையும் அழ வைத்த நாள்

ஓராண்டு கழிந்தாலும் ஓவியமாய்
பதிந்திருக்கின்றது உன் திருமுகம்
உன் நினைவை சுமந்து நாம்
நடைப் பிணமாய் வாழ்கின்றோம்
உந்தன் ஆத்மா நித்தியப் பெருவாழ்வு பெற
இறைவனைப் பிரார்த்தித்து நிற்கின்றோம்.

இல 05,
சமாதி வீதி,உடுவில்.

(691)

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'வேகமாக' வென்றது ஹைதராபாத் 'சோகமாக' சரிந்தது லக்னோ



டிராவிஸ் ஹெட், அபிஷேக் சர்மா விளாசல் காரணமாக, லக்னோ அணி 10 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் பரிதாபமாக வீழ்ந்தது.

ஹைதராபாத்தில் உள்ள ராஜீவ் மைதானத்தில் நேற்று நடந்த ஐ.பி.எல்., லீக் போட்டியில் ஹைதரா பாத் - லக்னோ அணிகள் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்ற லக்னோ அணித் தலைவர் ராகுல் துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்தார்.

**படோனி அரைச்சதம்**

லக்னோ அணிக்கு குயின்ரன் டி கொக் (2), மார்கஸ் ஸ்டாய்னிஸ் (3) ஏமாற்றினர். ராகுல் (29), குர்னால் பாண்ட்யா (24) ஓரளவு கைகொடுத்தனர். பின் இணைந்த நிக்கோலஸ் பூரன், ஆயுஷ் படோனி ஜோடி நம்பிக்கை தந்தது. நடராஜன் வீசிய 17, 19வது ஓவரில் தலா 2 பவுண்டரி விரட்டிய படோனி, 28 பந்தில் அரைச்சதம் எட்டினார். கம்மின்ஸ் வீசிய கடைசி ஓவரில் பூரன் 3, படோனி ஒரு பவுண்டரி அடிக்க 19 ஓ்டங்கள் கிடைத்தன.

20 ஓவர்களில் லக்னோ அணி 4 விக்கெட்டுக்களை இழந்து 165 ஓட்டங்களை எடுத்தது. பூரன் (48), படோனி (55) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

**ஹெட் விளாசல்**

சுலப இலக்கை விரட்டிய ஹைதராபாத் அணிக்கு அபிஷேக் சர்மா, டிராவிஸ் ஹெட் ஜோடி சுப்பர் ஆரம்பம் கொடுத்தது. யாஷ் தாகூர் வீசிய 2வது ஓவரில் 4 பவுண்டரி விரட்டினார் அபிஷேக். கிருஷ்ணப்பா கௌதம் வீசிய 3ஆவது ஓவரில் 3 சிக்சர், ஒரு பவுண்டரிவிளாசியஹெட், நவீன்உல்ஹக் வீசிய 5வது ஓவரில் வரிசையாக 2 பவுண்டரி, ஒரு சிக்சர் அடித்து 16 பந்துகளில் அரைச்சதம் எட்டினார்.

**அபிஷேக் அசத்தல்**

மறுமுனையில் அசத்திய அபி ஷேக், யாஷ் தாகூர் வீசிய 6வது ஓவரில் 2 சிக்சர், 2 பவுண்டரி அடித்தார். படோனி பந்தை சிக்சருக்கு பறக்க விட்ட அபிஷேக், 19 பந்தில் அரைச்சதம் கடந்தார். அபாரமாக ஆடிய அபிஷேக், யாஷ் தாகூர் பந்தை சிக்சருக்கு அனுப்பி வெற்றியை உறுதி செய்தார்.

ஹைதராபாத்9.3 ஓவர்களில் விக் கெட் இழப்பின்றி 167 ஓட்டங்களை எடுத்து வெற்றி பெற்றது. அபிஷேக் (75 ஓட்., 6 சிக்சர், 8 பவுண்டரி), ஹெட் (89 ஓட்., 8 சிக்சர், 8 பவுண்டரி) ஆட்ட மிழக்காமல் இருந்தனர். (7,10)

**-1000 சிக்சர்**

உனத்கட் பந்தை சிக்சருக்கு அனுப்பிய குர்னால் பாண்ட்யா, இந்த சீசனில் 1000வது சிக்சரை பதிவு செய்தார். மூன்றாவது முறையாக ஒரு ஐ.பி.எல்., சீசனில் 1000 அல்லது அதற்கு மேல் சிக்சர் பதிவானது. இதற்கு முன் 2022 (1062 சிக்சர்), 2023ல் (1124) இம்மைல்கல் எட்டப்பட்டது.

# இலங்கை பெண்கள் சம்பியன்

## ரி20 உலகக் கிண்ணத்துக்கும் தகுதி



மகளிர் ரி20 உலகக் கிண்ண தகுதி காண் தொடரில் இலங்கை பெண்கள் அணி சம்பியனாகியது.

இறுதிப் போட்டியில் ஸ்கொட் லாந்து பெண்கள் அணியை வீழ்த்தியே சம்பியனாகியது.

தொடரின் இறுதிப் போட்டிக்கு இலங்கை அணி யு.ஏ.இ அணியையும், ஸ்கொட்லாந்து அணி அயர்லாந்து அணியையும் வீழ்த்தி தெரிவகின.

அபுதாபியில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் நாணய சுழற்சியில் வென்ற ஸ்கொட்லாந்து வீராங்கனைகள் முதலில் இலங்கையை துடுப் பெடுத்தாப் பணித்தன.

இதற்கமைய, முதலில் துடுப் பெடுத்தாடிய இலங்கை அணி 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 169 ஓட்டங்கள் எடுத்தது.

இலங்கை மகளிர் துடுப்பாட்டம் சார்பில் சமரி அத்தபத்து தனது 2ஆவது ரி20ஐ சதத்தோடு 63 பந்து களில் 13 பவுண்டரிகள், 4 சிக்ஸர்கள் அடங்கலாக 102 ஓட்டங்கள் எடுத்தார்.

170 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப் பெடுத்தாடிய ஸ்கொட்லாந்து மகளிர் அணியானது 20 ஓவர்களில் 7 விக் கெட்டுக்களை இழந்து 101 ஓட்டங்கள் மட் டுமே எடுத்து தோல்வியைத் தழு வியது.

ஸ்கொட்லாந்து அணியின் துடுப் பாட்டத்தில் அதிகபட்ச ஓட்டங்களை 30 ஓட்டங்களுடன் பிரியனாஷ் சட் டேர்ஜி பதிவு செய்தார்.

இலங்கை மகளிர் பந்துவீச்சில் உதேசிகா ப்ரோபாதினி 3 விக்கெட் டுக்களை சுருட்டினார். போட்டியின் ஆட்ட நாயகியாக சமரி அத்தபத்து தெரிவாகினார். (7,10)

# இந்தியா - பாகிஸ்தான் மோதல்

## பெண்கள் ரி20 உலகக் கிண்ணப் போட்டியில்...




பெண்கள் "ரி20" உலகக் கிண்ண அட்டவணை வெளியானது.

எதிர்வரும் ஒக். 6இல் நடக்கவுள்ள லீக் போட்டியில் இந்தியா - பாகிஸ்தான் அணிகள் மோதுகின்றன.

பங்களாதேஷில், ஐ.சி.சி., பெண்களுக்கான "ரி20" உலகக் கிண்ணத் தொடரின் 9ஆவது சீசன் வரும் ஒக். 3-20ல் நடக்கவுள்ளது.

இதற்கான அட்டவணை வெளியானது. மொத்தம் 10 அணிகள், இரண்டு பிரிவுகளாக லீக் சுற்றில் (ஒக். 3-14) பங்கேற்கின்றன. ஒவ்வொரு பிரிவிலும் முதலிரண்டு இடம் பிடிக்கும் அணிகள் ஒக். 17 (சில்ஹெட்), 18இல் (தாகா) நடக்கும் அரையிறுதியில் மோதும்.

இதில் வெல்லும் அணிகள் அக். 20இல் டாக்காவில் நடக்கும் இறுதிப் போட்டியில் விளையாடும். மொத்தம் 18 நாட்களில், 23 போட்டிகள் நடக்கவுள்ளன.

இந்திய அணி தனது முதல் போட்டியில் நியூசிலாந்தை ஒக். 4இல் சந்திக்கிறது. அதன்பின் பாகிஸ்தான் (ஒக். 6), தகுதிச் சுற்றில் தேர்வாகும் அணி (அக். 9), "ஆறு முறை உலக சம்பியன்" அவுஸ்திரேலியாவை (ஒக். 13) எதிர்கொள்கிறது. (7,10)

**யார் யார் எந்தப் பிரிவு**

"ஏ" பிரிவில் "நடப்பு சம்பியன்" அவுஸ்திரேலியா, இந்தியா, நியூசிலாந்து, பாகிஸ்தான், இலங்கை அணிகள் இடம் பெற்றுள்ளன. இப்பிரிவு போட்டிகள் சில்ஹெட்டில் நடக்கும்.

"பி" பிரிவில் பங்களாதேஷ், இங்கிலாந்து, தென்னாபிரிக்கா, மே.தீவுகள், ஸ்கொட்லாந்து அணிகள் இடம் பிடித்துள்ளன. இப்பிரிவு போட்டிகள் டாக்காவில் நடக்கும்.

## மட்ரிட் ஓபன் டென்னிஸ்

# 'ஷ்வீட்' ஸ்வியாடெக் சம்பியன்



மட்ரிட் ஓபன் டென்னிஸ் ஒற்றையர் பிரிவில் போலந்து வீராங்கனை ஸ்வியாடெக் சம்பியன் பட்டம் வென்றார்.

ஸ்பெயினில் மட்ரிட் ஓபன் டென்னிஸ் தொடர் நடந்தது.

பெண்கள் ஒற்றையர் பிரிவு பைனலில் உலகின் "நம்பர்-1" போலந்தின் இகா ஸ்வியாடெக், 2வது இடத்தில் உள்ள பெலாரசின் அரினா சபலென்கா மோதினர்.

முதல் செட்டை 7-5 என போராடி கைப்பற்றிய ஸ்வியாடெக், இரண்டாவது செட்டை 4-6 என இழந்தார். வெற்றியாளரை நிர்ணயிக்கும் மூன்றாவது செட்டை ஸ்வியாடெக் 7-6 என தன்வசப்படுத்தினார்.

மூன்று மணி நேரம், 11 நிமிடம் நீடித்த போட்டியில் ஸ்வியாடெக் 7-5, 4-6, 7-6 என்ற கணக்கில் வெற்றி பெற்று இத்தொடரில் முதன் முறையாக கிண்ணம் வென்றார்.

தவிர, கடந்த ஆண்டு பைனலில் சபலென்காவிடம் கண்ட தோல்விக்கு பதிலடி கொடுத்தார். நடப்பு சீசனில் 3ஆவது பட்டம் வென்ற ஸ்வியாடெக், ஒட்டுமொத்தமாக தனது 20ஆவது டபிள்யு.டி.ஏ., ஒற்றையர் பட்டத்தை கைப்பற்றினார்.

இதன்மூலம் 2012க்கு பின் இளம் வயதில் 20 பட்டம் வென்ற வீராங்கனையானார் ஸ்வியாடெக் (வயது-22). இதற்கு முன் 2012ல் டென்மார்க்கின் கரோலின் வோஸ்னியாக்கி (வயது-22) இச்சாதனை படைத்திருந்தார். (7,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போலி விளம்பரம் தொடர்பில் அவதானமாக இருங்கள்

## வாடிக்கையாளர்களுக்கு மக்கள் வங்கி அறிவிப்பு

(கொழும்பு)

மக்கள் வங்கியிலுள்ள வேலை வாய்ப்பு தொடர்பில் வெளியாகும் விளம்பரங்கள் தொடர்பில் அவதானமாக இருக்குமாறு நாட்டு மக்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் வங்கியின் முகப்புத்தக பக்கத்தில் பதிவிடப்பட்டுள்ளது.குறித்த அறிவுறுத்தலில்,

உயர் தரத்தில் தேர்ச்சி பெற்ற 18 தொடக்கம் 30 வயதிற்கு உட்பட்ட இளைஞர் யுவதிகளுக்கு மக்கள் வங்கியில் வேலை வாய்ப்புகள் இருப்பதாகவும்,மற்றும் முழுமையான விவரங்களை அறிய கீழே உள்ள நீல நிற இணைப்பைக் கிளிக் செய்யவும் அல்லது "Bank" என்று கமெண்ட் செய்யவும் எனக் கோரும் இந்த விளம்பரம் முற்றிலும் போலியான மோசடியாகும்.

இந்த விளம்பரத்திற்கும் மக்கள் வங்கிக்கும் எந்தவித தொடர்பும் இல்லை. இத்தகைய மோசடிக்காரர்களின் செயல்களில் சிக்கிக் கொள்ள வேண்டாம் எனவும் மக்கள் வங்கி தெரிவித்துள்ளது. (நி-6)


# பாவனைக்குதவாமல் போகும் உப்புக்குள கிராம நிலத்தடிநீர்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு உப்புக்குள கிராமத்தின் பாவனைக்கு பயன்படுத்த முடியாத நிலையில் இருப்பதாக மக்கள் கவலையை வெளியிட்டுள்ளனர்.

அன்றாட தேவைகளுக்கு குறித்த நீரினை பயன்படுத்தி வரும் மக்கள் பெரும் இன்னல்களுக்கு உள்ளாகி உள்ளனர்.

நிலத்தடி நீரின் இந்த மாற்றத்திற்கான காரணங்களை ஆராய்ந்து அமைத்த கிணறுகளை பராமரிப்பது தொடர்பிலும் மக்களுக்கு வழிகாட்டல்களை வழங்கினால் இந்த சிக்கலை தவிர்த்துக் கொள்ள முடியும் என சமூகவியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். (நி-6)



தமிழ்தேசிய கலை இலக்கிய பேரவையின் ஏற்பாட்டில் "ஊழி" திரைப்பட பாடல் வெளியீட்டு நிகழ்வு நேற்று கிளிநொச்சி மாவட்ட செயலக திறன்விருத்தி மண்டபத்தில் இடம்பெற்றது. (படம்-சப்தசங்கரி)

# பாராளுமன்றம் செல்வதற்கு டயானா கமகே தகுதியற்றவர்

## இரட்டைக் குடியுரிமை பெற்றமை நிரூபிப்பு



(கொழும்பு)

இராஜாங்க அமைச்சர் டயானா கமகே, இரட்டை குடியுரிமை பெற்றுள்ளமை நிரூபிக்கப்பட்டதை தொடர்ந்து அவர் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை வகிப்பதற்கு தகுதியற்றவர் என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

சமூக செயற்பாட்டாளரான ஓஷல ஹேரத் சமர்ப்பித்திருந்த மேன்முறையீட்டு மனுவை விசாரித்த உயர் நீதிமன்றம் நேற்று காலை இந்தத் தீர்ப்பை அறிவித்துள்ளது.

டயானா கமகே பிரித்தானிய குடியுரிமை பெற்றுள்ள காரணத்தினால் பாராளுமன்றத்தில் அமர்வதற்கு சட்டரீதியாக தகுதியற்றவர் என அறிவிக்குமாறு கோரி இந்த மனு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

எனினும் இராஜாங்க அமைச்சர் டயானா கமகேவின் பாராளுமன்ற உறுப்புரிமைக்கு எதிரான மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றம் நிராகரித்திருந்தது.

இதனைத் தொடர்ந்து இரண்டு வாரங்களின் பின்னர் மேன்முறையீட்டு மனுவினை சமூக செயற்பாட்டாளரான ஓஷல ஹேரத் உயர்நீதிமன்றத்தில் சமர்ப்பித்திருந்தார்.

இவ்வாறு தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீட்டு மனு மீதான விசாரணை கடந்த பெப்ரவரி மாதம் 13ஆம் திகதி நிறைவடைந்த நிலையில் வழக்கு காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டது.

இந்நிலையில் நேற்றுக் காலை இந்த வழக்கின் தீர்ப்பு உயர்நீதிமன்றத்தினால் வழங்கப்பட்டுள்ளது. (நி-6)


## யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி (தேசிய பாடசாலை)

### பழைய மாணவர் சங்கம் வருடாந்தப் பொதுக் கூட்டம்-2024

மேற்படி சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் 26.05.2024 ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணிக்கு கல்லூரி பேச் மண்டபத்தில் நடைபெறவுள்ளதை அனைத்து பொதுச்சபை உறுப்பினர்களுக்கும் அறியத்தருவதில் பெருமகிழ்ச்சியடைவதோடு அனைத்து பழைய மாணவர் சங்க உறுப்பினர்களும் தவறாது சமூகம் தரும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

தலைவர்,செயலாளர், பொருளாளர் ஆகிய பதவிகளுக்கான வேட்பு மனுக்களும், பிரேரணைகளும் 18.05.2024 சனிக்கிழமை பி.ப 4.00 மணிக்கு முன்பாக கீழ்க்காணும் முகவரியில் செயலாளரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

தலைவர், செயலாளர்,பொருளாளர் ஆகிய பதவிகளுக்கான வேட்பு மனுக்கள் கிடைக்கப்பெற்றதும் 19.05.2024 ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருக்கும் நிர்வாக சபைக் கூட்டத்தில் ஆராயப்பட்டபின் பொதுச் சபையின் அங்கீகாரத்திற்கு விடப்படும்.

அனைத்து பழைய மாணவர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

C.P.M வீதி,
நவாலி தெற்கு,
மானிப்பாய்.

திரு.சி.சிவச்செல்வன்,
செயலாளர்.
யா/மானிப்பாய்
இந்துக் கல்லூரி ப.மா.ச

(700)


# இராசிபலன்

09.05.2024
சித்திரை 26, வியாழக்கிழமை
பிரதமை காலை 7.44 மணிவரை

கார்த்திகை பிற்பகல் 1.29 மணிவரை
சுபநேரம் 7.24-8.54 மணிவரை
இராகுகாலம் 1.24-2.54 மணிவரை

சந்திராஷ்டமம்
உத்தரம், அத்தம்.

வளவன்




யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காண்பீர்கள், காலைப்பொழுதே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம்,பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும்.




வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதில் ஆர்வம் காட்டுவீர்கள், ஊக்கத் தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.




சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், கௌரவக் குறைவான சம்பவங்கள் இடம்பெறலாம்.




வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, பிள்ளைகளின் நீண்ட நாளைய கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள், எதிர்கால நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.




கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், வழிபாட்டில் நம்பிக்கை கூடும்.




குடும்பத்தில் மங்கள நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.




எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் வாய்ப்புண்டு, பணத்தேவைகள் பூர்த்தியாகும், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு.




நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் வாய்ப்புண்டு, மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம்.




எடுத்த செயலை முடிக்க ஒருமுறைக்கு பலமுறை அலைய நேரிடலாம், செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், சயன சுகக் குறைவான நாள்.




எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், அதிகம் செலவாகும் என நினைத்த காரியமொன்று குறைந்த செலவில் முடிவுக்கு வரலாம், வம்பு வழக்குகள் தீர்ந்து வளம் காணும் நாள்.




புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், இனத்தார்பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும்,கடன் சுமை குறைந்து கவலைகள் தீரும் நாள்.




கொடுக்கல் வாங்கல்களை ஒழுங்கு செய்ய முற்படுவீர்கள், தொழில் நலனில் எதிர்பார்த்த முன்னேற்றம் கிடைக்கும், பகை விலகி பாசம் கூடும் நாள், போசன சுகமுண்டு.


ஒழுக்கமுள்ளவர்கள் இந்த உலகத்திற்கு ஏணியாய் இருப்பார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதாரக் கொள்கையை மாற்றினால்
# மீண்டும் நெருக்கடி ஏற்படலாம்

(கொழும்பு)

**நாட்டில் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள பொருளாதாரக் கொள்கை மாற்றமடைந்தால் மீண்டும் பழைய நிலைமை ஏற்படலாம் என மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க எச்சரிக்கை விடுத்துள்ளார்.**



மத்திய வங்கியில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இது குறித்து கருத்து தெரிவித்துள்ளார்.

நீடித்த ஸ்திரநிலை என்ற தொனிப்பொருளில் நடைபெற்ற இந்த ஊடக சந்திப்பில் புதிய மத்திய வங்கி சட்டத்திற்கு அமைய, மத்திய வங்கி அறிவித்துள்ள முதலாவது பொருளாதார விபரிப்பு தொடர்பாக தெளிவுபடுத்தப்பட்டது.

நாட்டின் பொருளாதாரம் படிப்படியாக மீண்டும் வழமைக்கு திரும்புவதாக மத்திய வங்கியின் ஆளுநர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐ.எம்.எப் திட்டத்துடன் இணக்கம் காணப்பட்ட இலக்குகள் என்பது அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்ட செயற்றிட்டம் என சுட்டிக்காட்டிய ஆளுநர், அரசாங்கம் இணங்கியுள்ள குறித்த செயற்றிட்டத்தை தற்போதைய முறையில் தொடர்ந்தால் நிலையாக பேண முடியும் என தாம் அறிவித்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், தற்போதைய பொருளாதார கொள்கையில் மாற்றம் ஏற்பட்டால், மீண்டும் பழைய நிலை ஏற்படுவதற்கான சாத்தியம் உள்ளதாகவும், தற்போதைய கொள்கையை எதிர்காலத்திலும் நடைமுறைப்படுத்தப்படுவது அவசியம் எனவும் மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க வலியுறுத்தியுள்ளார். (நி-6)

## கட்டாக்காலி கால்நடைகளால் சிறுபோக செய்கை பாதிப்பு
### விவசாயிகள் கவலை



(தருமபுரம்)

வயல் நிலங்களுக்குள் கட்டாக்காலி கால்நடைகளின் அதிக நடமாட்டத்தால் சிறுபோக செய்கையினை முன்னெடுப்பதில் சிரமம் ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் கல்மடு குளத்தின் கீழ் சிறுபோக நெற்செய்கை முன்னெடுத்த நிலையில் நெற் பயிர்களை சேதப்படுத்தி வருவதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

நிலவி வரும் கடும் வெப்ப மான நிலையிலும் சிரமத்திற்கு மத்தியில் சிறுபோக செய்கையில் ஈடுபட்டுவரும் நிலை யில் கட்டாக்காலி கால்நடைகள் பயிர்களை சேதப்படுத்தி வருவதாக விவசாயிகள் கவலை தெரிவித்தனர். (நி-6)



டெங்கு அற்ற தேசத்தை உருவாக்கும் நோக்கில் கடந்த 5 ஆம் திகதி பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையும், வல்வெட்டித்துறை நகர சபையும், ஜே/384 தொண்டமானாறு வடக்கு கிராம அலுவலர் அலுவலகமும் இணைந்து சிரமதானப் பணியை மேற்கொண்டது. இதில் தொண்டமானாறு வடக்கு அறநெறி வகுப்பு நிர்வாகிகள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்களும் கலந்து கொண்டனர். (படம்- மகாலிங்கம்)

## துர்க்காதேவி தேவஸ்தான மண்டலாபிஷேக பூர்த்தி விழா

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை துர்க்கை அம்பாளின் மகா கும்பாபிஷேகத்தை தொடர்ந்து நடைபெற்ற மண்டாவிஷேகத்தின் பூர்த்தி விழா இன்று வியாழக்கிழமை காலை 6 மணிக்கு இடம் பெறும்.

1008 கலச சங்காபிஷேகம் சிறப்புப் பூசை வழிபாட்டுடன் நடைபெற உள்ளது.

பகல் 12 மணிக்கு மகேஸ்வர பூசையும் இடம் பெறும்.

மாலை 4 மணிக்கு சிறப்புப் பூசை வழிபாடுகள் நடைபெற்று அம்பாளின் திரு ஊஞ்சல் இடம்பெற்று மாலை 6 மணிக்கு பூந்தண்டிகையில் அம்பாள் வீதியுலா வரும் சிறப்பு நிகழ்ச்சி இடம்பெறும் என தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தான தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் அறிவித்துள்ளார். (நி-6)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 150 | 120 | 150 | 100-160 | 150 |
| உருளைக்கிழங்கு | 180 | 180 | 180 | 170 | 200 |
| பச்சைமிளகாய் | 80 | 70 | 100 | 50-70 | 100 |
| தக்காளி | 100 | 140 | 120 | 120 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 130 | 150 | 120 | 160 |
| கோவா | 150 | 170 | 150 | 150 | 200 |
| கரட் | 300 | 350 | 240 | 200 | 300 |
| பூசணி | 80 | 120 | 100 | 80-100 | 80 |
| புடோல் | 80 | 180 | 130 | 100 | 120 |
| வாழைக்காய் | 80 | 80 | 80 | 60-80 | 140 |
| சின்ன வெங்காயம் | 300 | 320 | 300 | 200-350 | 320 |
| பெரிய வெங்காயம் | 250 | 300 | 200 | 170 | 240 |
| பாகற்காய் | 300 | 400 | 350 | 250 | 400 |
| வெண்டக்காய் | 100 | 200 | 120 | 150 | 200 |
| கருணைக் கிழங்கு | 100 | 140 | 120 | -- | 200 |
| பயற்றங்காய் | 400 | 200 | 250 | 300-400 | 200 |
| லீக்ஸ் | 250 | 350 | 320 | 300 | 320 |
| பீற்றூட் | 200 | 200 | 280 | 200 | 320 |
| கறிமிளகாய் | 150 | 200 | 300 | 250 | 200 |
| முருங்கைக்காய் | 600 | 650 | 450 | 300-550 | 600 |
| போஞ்சி | 200 | 400 | 400 | 330 | 400 |
| கத்தரிதம்புள்ள | 120 | 80 | 150 | -- | 140 |
| கீரை - 1 பிடி | 100 | 100 | 100 | 40-60 | 100 |
| தேசிக்காய் | 1000 | 1000 | 1000 | 800-1200 | 1200 |
| தேங்காய் (ஒன்று) | 120 | 110 | 70 | 50-90 | 80-120 |
| இராசவள்ளி | 350 | 400 | 500 | 250 | 400 |
| வெங்காயப்பூ | 600 | 350 | 200 | -- | 480 |
| முள்ளங்கி | 80 | 100 | 180 | 80 | 240 |
| பொன்னாங்காணி | 60 | 60 | 100 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 40 | 80 | 80 | 80 |
| ஈரப்பலா | | | 120 | 100 | |


கண்ணீர் அஞ்சலி



எமது சக உத்தியோகஸ்தர்
திரு.ஸ்ரீகந்தபாலன் ஜெயராம்
அவர்களது பாசமிகு தாயார்
அமரர்.ஸ்ரீகந்தபாலன்
சறோஜினிதேவி

தோற்றம்
03.07.1954

மறைவு
06.05.2024

அவர்களின் மறைவிற்கு
எமது ஆழ்ந்த
அனுதாபங்களை
தெரிவிப்பதோடு அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய
இறைவனை
பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்-கல்விசாரா ஊழியர் நலன்புரிச்சங்கம்,
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி கோப்பாய்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உருளைக்கிழங்குகளில் பச்சை நிறம் தென்பட்டால் அது நச்சுத்தன்மையானது; அதனை தவிருங்கள்

## பொதுச் சுகாதார பரிசோதகர் எச்சரிக்கை

(கொழும்பு)

**பச்சை நிற கிழங்குகளில் அதிக நச்சுத்தன்மை உள்ளதால் அவற்றை வாங்குவதைத் தவிர்க்குமாறு பொதுமக்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.**

குறித்த தகவலை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சந் துன் ரத்நாயக்க தெரிவித் துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் கருத் துத் தெரிவிக்கையில்,

குழந்தைகளுக்கு நல்லது என்று நினைத்து தாய் மார்கள் பச்சைக் கிழங் குகளை தேடிப் பார்த்து வாங் குவது என்பதுதவறு. உருளைக்கிழங்கு முளைப்ப தற்கு தயாராக இருப்ப தாலோ, அல் லது மண்ணில் இருப்ப தாலோ அல் லது சேமிப்பின் போது சூரிய ஒளி படுவதனாலோ ஏற்படும் இரசாயன மாற்றத்தினால் உருளைக் கிழங்கு பச்சை நிறமாக மாறுகிறது.

அந்தவகையில், உரு ளைக் கிழங்கு பச்சை நிற மாக மாறுவதற்கு முக்கிய காரணம், உருளைக்கிழங்கை சேதப் படுத்தும் பூச்சிகள் மற்றும் நோய்களுக்கு எதிராக sola nine and chaconine எனப் படும் இயற்கை இரசாய னங் களால்கிளை கோல்கலாய்டு களின் உற்பத்தி அதிகரிப்பா கும்.

இந்த பச்சை உருளைக் கிழங்கு மிகவும் நச்சுத்தன்மை வாய்ந்தது.

எனவே நுகர்வோர் பச்சை உருளைக்கிழங்கு வாங்கு வதை தவிர்க்க வேண்டும் என அவர் கோரிக்கை தெரிவித் துள்ளார். (நி)

## அறிவித்தல்
## நகராட்சி மன்றம் சாவகச்சேரி

சாவகச்சேரி நகராட்சி மன்றத்தின் பரிபாலனத்திற்குட்பட்ட சாவகச்சேரி நகரப் பூங்கா, சாவகச்சேரி நகராட்சி மன்றப் பொது விளையாட்டு மைதானம், கண்ணாடிப்பிட்டி இந்து மயானம், கொல்லங்கிராய் இந்து மயானம், கிறிஸ்தவ சேமக்காலை ஆகியவற்றிற்கான அபிவிருத்திச் சபைகள் தெரிவுசெய்வது தொடர்பான கூட்டம் எதிர்வரும் 24.05.2024 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப 10 மணிக்கு நகராட்சிமன்ற பொன்விழா மண்டபத்தில் இடம்பெறவுள்ளது என்பதனை சாவகச்சேரி நகராட்சி மன்ற குடியிருப்பாளர்களுக்கு அறியத்தருவதுடன் இக் கூட்டத்தில் கலந்துகொண்டு வினைத்திறனான அபிவிருத்திச் சபைகளின் தெரிவினை மேற்கொள்ள ஒத்துழைப்பு வழங்குமாறும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

செயலாளர்,
நகராட்சி மன்றம்,
சாவகச்சேரி.

(சி-0316)

## யாழில் சூடுபிடிக்கும் வெள்ளரிப்பழ விற்பனை

(யாழ்ப்பாணம்)

உடல் வெப்பநிலையை குறைத்து குளிர்மையினை ஏற்படுத்தும் வெள்ளரிப் பழம் யாழ்ப்பாணத்தில் தற்போது மும்முர மாக விற்பனையாகி வருகின்றது. திருநெல் வேலி, யாழ். நகர சந்தைப்பகுதிகளுக்கு அருகாமையில் வெள்ளரிப் பழத்தினை பொதுமக்கள் ஆர்வத்துடன் கொள்வனவு செய்துவருகின்றனர்.

ஒரு வெள்ளரிப் பழத்தின் விலை ரூபாய் 300 முதல் 450 ரூபாய் வரை விற் பனை செய்யப்பட்டு வருகின்றது. (நி)


லங்கா மஹால் (PVT) LTD
DHL உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை
அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.
(354)
இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.
இந்தியா தொடர்புகளுக்கு :
0091956615671 9
WESTERN UNION WU MoneyGram. Ria MONEY TRANSFER
ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.
யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,
077 839 3974



செல்வம் பொங்கிடும் அட்ஷய திருதியை நன்னாளில் சகல சௌபாக்கியங்களும் பெற்று தரும் விசேஷ தினத்தில் எங்களுடன் கொண்டாட பெறுமதி மிக்க வாடிக்கையாளர்களை அகமகிழ்வுடன் அழைக்கின்றோம்.

மயூரன்ஸ் நகைமாளிகை



அட்ஷய திருதியை தினமாகிய 10.05.2024 அன்று சிறப்பு விலைக் கழிவுகளும் பெறுமதிமிக்க பரிசில்களும் உங்களுக்காக காத்திருக்கின்றன என்பதை அறியத் தருவதையிட்டு அக மகிழ்கிறோம்.




(சி-0304)

இல. 07, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P. 021 222 3015, 077 651 0251.



தொட்டுத் தொடரும் எம் பாரம்பரியங்களைக் கட்டிக் காப்போம்...

அக்ஷய திருதியை எனும் உன்னத நாளில் தங்கம் வாங்கி எம் வாழ்வை தங்கமாய்ப் பெருக்கிக் கொள்வோம்




வினோ நகைப் பூங்கா



அக்ஷய திருதியை நன்நாளில் (10.05.2024) எமது ஸ்தாபனத்திற்கு வந்து தங்கம் வாங்கும் அனைவருக்கும் விசேட விலைக் கழிவுகளுடன் பல வெகுமதிகளைத் தர நாம் காத்திருக்கின்றோம்.

"தங்கம் வாழ்க்கையின் உன்னத தருணங்களை நினைவூட்டும்"

வினோ நகைப்பூங்கா,
இல. 177, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 5394, 021 222 9494, 074 209 9494

(C-0317)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

# உலகளவில் உச்சம் தொட்ட வெப்பம் பதறும் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள்!



(வோஷிங்டன்)

கடந்த ஏப்ரல் மாதத்தில் உலகளவில் இதுவரை இல்லாத அளவுக்கு அதிகபட்ச வெப்பம் பதிவாகியுள்ளதாக ஜரோப்பிய ஒன்றிய பருவ நிலை அமைப்பு தெரிவித்துள்ளது. சுற்றுச்சூழல் ஆர்வலர்களைப் பதற்றமடைய செய்துள்ளது.

ஜரோப்பிய ஒன்றியத்தின் பருவநிலை நிறுவனமான "கோப்பர்நிக்கஸ் காலநிலை மாற்ற சேவை" (சி3எஸ்) அமைப்பு வெளியிட்ட தகவல்படி, கடந்த ஏப்ரல் மாதத்தில் உலகளவில் இதுவரை இல்லாத அளவுக்கு தொடர்ந்து 11 ஆவது மாதமாக அதிக வெப்பநிலை பதிவாகியுள்ளது.

கடந்த 1850-1900 கால கட்டத்தில் மாத சராசரியான 15.03 டிகிரி செல்சியஸை விட இந்த ஆண்டு ஏப்ரலில் சராசரி 1.58 டிகிரி செல்சியஸ் அதிகமாக இருந்தது. இது 1991 - 2020 காலகட்ட சராசரியை விட 0.67 டிகிரி செல்சியஸ் அதிகமாகும். மேலும் கடந்த 2016 ஏப்ரலில் பதிவான முந்தைய அதிகபட்ச வெப்பநிலையை விட 0.14 டிகிரி செல்சியஸ் வெப்பம் அதிகமாக நிகழாண்டு ஏப்ரலில் பதிவாகி உள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் உலக அளவில் பல்வேறு நாடுகளில் வெப்பம், மழை மற்றும் வெள்ளம் என மாறுபட்ட காலநிலைகள் மக்களின் அன்றாட வாழ்க்கையை சீர்குலைத்துள்ளன.

புவி வெப்பமடைவதால், பனிப்பாறைகள் உருகும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக பல வருடங்களாக எச்சரித்து வரும் சுற்றுசூழல் ஆய்வாளர்கள், தற்போது உலகளவில் வெப்பநிலையும் உச்சமடைவதால் அதிர்ச்சியடைந்துள்ளனர். (நி-6)

# உலகம் முழுவதிலும் இருந்து மீளப்பெறப்படும் அஸ்ட்ராஜெனிக்கா

(லண்டன்)

பிரித்தானியாவைத் தளமாகக் கொண்ட மருந்து தயாரிப்பு நிறுவனமான அஸ்ராஜெனிக்கா தனது கொவிட் -19 தடுப்பூசிகளை உலகம் முழுவதும் இருந்து மீளப்பெறுவதற்கு தீர்மானித்துள்ளது.

அஸ்ட்ராஜெனிக்காவின் கொவிட்-19 தடுப்பூசி அரிதான மற்றும் ஆபத்தான பக்க விளைவை ஏற்படுத்தும் என்று நீதிமன்ற ஆவணங்களின்ஊடாக அண்மையில் ஒப்புக்கொள்ளப்பட்டது.

இந்நிலையிலேயே உலகம் முழுவதும் இருந்து தடுப்பூசிகளை மீளப்பெற்றுக்கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, தடுப்பூசி இனி தயாரிக்கப்படவோ அல்லது விநியோகிக்கப்படவோ மாட்டாது என நிறுவனம் அறிவித்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

தடுப்பூசிகளை மீளப்பெறுவதற்கான விண்ணப்பம் மார்ச் மாதம் ஐந்தாம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் முதல் நடைமுறைக்கு வந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-6)

# மீண்டுமொரு பனிப்போர் வேண்டாம்

## பிரான்ஸ் விஜயத்தில் சீன ஜனாதிபதி தெரிவிப்பு

(பீஜிங்)

சீன ஜனாதிபதி ஜி ஜின் பிங் ஐந்து ஆண்டுகளில் முதன்முறையாக நேற்று முன்தினம் பிரான்ஸ் சென்ற நிலையில், இன்னொரு பனிப்போர் உருவாகாமல் தடுக்க பிரான்சின் உதவி வேண்டும் என பிரான்ஸ் ஜனாதிபதியிடம் கேட்டுக்கொண்டார்.

தொடரும் சீன உளவாளிகள் கைது மற்றும் அமெரிக்காவும் அதன் கூட்டாளர்களான நாடுகளும் உக்ரைன் ஊடுருவலைக் காரணம் காட்டி ரஷ்யா மீது தடைகள் விதித்திருந்தாலும், ரஷ்யாவுடனான சீனாவின் எல்லையில்லா நட்பு தொடர்வது. என பல விடயங்கள் தொடர்பில் ஜரோப்பிய ஒன்றியத்துக்கும் சீனாவுக்கும் இடையில் கருத்து வேறுபாடு நிலவுகிறது.



இந்நிலையில், பிரான்ஸ் சென்ற சீன ஜனாதிபதியான ஜி ஜின்பிங்கிடம், உக்ரைனில் பாதுகாப்பு இல்லையென்றால், ஜரோப்பாவில் பாதுகாப்பு இருக்கமுடியாது என்ற விடயத்தை அழுத்தம் திருத்தமாக தெரிவித்துக் கொண்டுள்ளார்.

உக்ரைன் ரஷ்ய மோதல்களை, சீனாவை விமர்சிக்க பயன்படும் கருவியாக பயன்படுத்துவதற்கு பதிலாக, இரு தரப்பும் பேச்சுவார்த்தைகள் நடத்துவதன் மூலமே பிரச்சினைகளைத் தீர்க்கமுடியும் அதே வேளை உக்ரைன் ரஷ்ய மோதலை, மூன்றாவது நாடு ஒன்றின் மீது பழிபோடவோ, மூன்றாவது நாட்டின் பெயரைக் கெடுத்து, அதை புதிய பனிப்போர் ஒன்றை உருவாக்குவதற்கு பயன்படுத்துவதை நாங்கள் எதிர்க்கிறோம் என்று ஜி ஜின்பிங் கூறினார்.

கணிக்க முடியாத அளவிலான அபாயங்கள், உலக வர்த்தகம் சிதைவுறும் அபாயம் குறித்த கவலைகள் என ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த திருப்பு முனையின் உலகம் நின்றுகொண்டிருக்கிறது என பிரான்ஸ் ஜனாதிபதி தெரிவித்தார்.

மேலும் ஜுலை மாதம் பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் நடைபெற இருக்கும் ஒலிம்பிக் போட்டிகளின் போது, உலகம் முழுவதும் போர் நிறுத்தம் செய்யப்பட வேண்டும் என இரு தலைவர்களும் கோரிக்கை வைத்துள்ளனர். (நி-6)

# ஐந்தாவ...

# ரஷ்ய ...

(மொஸ்கோ)...

ரஷ்ய ஜனாதி... கடந்த மார்ச் ம... திபதித் தேர்தலி... அதிகமான வாக்... வது முறையாக... மீண்டும் பதவியே...

ரஷ்யாவை ஆட்சி செய்த ஜோசப் ஸ்டாலினுக்குப் பிறகு அதிக காலம் கிரெம் ...ளின் தல... விளாடிமி... முறையா...

# ஜெலன்ஸ்கியை ெ... உயர் அதிகாரிக...



(கீவ்)

ஜெலன்ஸ்கி மற்றும் பிற மூத்த அதிகாரிகளைப் படுகொலை செய்ய சதித் திட்டம் தீட்டிய இரு உக்ரைனிய பாதுகாப்புப் படை அதிகாரிகள் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

பிரபல ஊடகமொன்று வெளியிட்டுள்ள செய்தியிலேயே இத்தகவல் வெளியாகியுள்ளது. உக்ரைன் அரசின் பாதுகாப்புப் பிரிவில் அங்கம் வகிக்கும் ஜேர்னல்கள் இருவரே இவ்வாறு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வெளிநாடு

# வது தடவையாக பதவியேற்றார்

# ஜனாதிபதி விளாடிமிர் புடின்

(கா)

**னாதிபதி விளாடிமிர் புடின், ச் மாதம் நடைபெற்ற ஜனா ர்தலில் 87 சதவீதத்திற்கும் வாக்குகளைப் பெற்று, ஐந்தா யாக ரஷ்ய ஜனாதிபதியாக தவியேற்றுள்ளார்.**

ளின் தலைவராக இருந்த விளாடிமிர் புடின் ஐந்தாவது முறையாக நேற்றுமுன்தி னம் கிராண்ட் கிரெம்ளின் அரண் மனை வழியாக புனித ஆண்ட்ரூ சிம்மாசன மண்டபத்திற்கு சென்று பதவியேற்றதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

மே 2000 இல் ஜனாதிபதி புடினின் முதல் பதவியேற்றதி லிருந்து, ரஷ்யாவிலும் உலகிலும் நிலைமை நிறைய மாறிவிட்டது. மேலும் 24 ஆண்டுகளுக்குப் பிறகு ஜனநாயகத்தையும் நாட் டையும் மேம்படுத்துவதாக உறு தியளித்த புடின், உலக ஒழுங்கை தலைகீழாக மாற்றிய உக்ரை னுக்கு எதிராக போரில் இறங்கி னார்.

எவ்வாறாயினும், புடின் தனது புதிய பட்டத்துடன் தந்திரோபாய அணு ஆயுதப் பயிற்சியில் ஈடுபடு மாறு ரஷ்யப் படைகளுக்கு அறி வுறுத்தியிருப்பது குறித்து உலகத் தலைவர்கள் விசேட கவனம் செலுத்தியுள்ளதாகவும் கூறப்படு கிறது. (நி-6)



# ய கொலை செய்ய திட்டம்

# ாரிகள் இருவர் கைது



மூத்த செய்ய ரைனிய கைது வெளி

வளியிட் தகவல் அரசின் பகிக்கும் வ் வாறு

கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் ஒருவர் ரஷ்ய பாதுகாப்பு பிரிவிடம் இருந்து 2 ஆளில்லா விமா னங்களையும் மற்றும் வெடிபொருட் களையும் பெற்றுள்ளார் எனவும் அவற்றை மற்றொரு நபருக்குக் கொடுத்து குண்டு வெடிப்பு தாக்குதலை நடத்தத் திட்டம் தீட்டி யுள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த இருவருவர் மீதும் தேச துரோக குற்றச்சாட்டு சுமத்தப்பட் டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# மோதல் பகுதிக்குள் சிக்கிய மருத்துவமனை உயிரைக் காக்க தப்பியோடும் நோயாளிகள்

(காசா)

ரஃபாவின் பிரதான மருத் துவமனையிலிருந்து மருத் துவர்களும் நோயாளிக ளும் தப்பியோடுகின்றனர் என ரொய்ட்டர் செய்தி வெளி யிட்டுள்ளது.

மோதல் பகுதி என இஸ் ரேல் அறிவித்துள்ள காசா வின் தெண்பகுதியில் அபுயூ சுவ்அல் நஜார் மருத்துவ மனை காணப்படுகின்றது.

இந்த மருத்துவமனை முற்றாக இயங்க முடியாத நிலையில் காணப்படுகின்றது.

இஸ்ரேல் இந்த மருத்து வமனையை மோதல் களத் தின் மையத்திற்குள் சிக்க வைத்துள்ளதால் அந்த மருத்துவ மனை எதிர்கொள்ளும் அச்சுறுத்தல் காரணமாக நோயாளிகளும் மருத்து வர்களும் வெளியேறுகின் றனர் என வைத்தியர் மர்வான் அல் ஹம்ஸ் ரொய்ட்டருக்கு தெரிவித் துள்ளார். இந்த மருத்துவமனை மூடப்பட்டால் சிறுநீரக நோயா ளிகள் 200 பேரின் உயிருக்கு ஆபத்து ஏற்படலாம் என உலக சுகாதார ஸ்தாபனத்தின் பேச்சாளர் மார்க்கிரட் ஹரிஸ் தெரிவித்துள்ளார்.





சிறுநீரகம் செயல் இழந்துள்ள தால் பாதிக்கப்பட்டவர்களை இந்த மருத்துவமனையே உயிருடன் வைத்திருக்கின்றது. இந்த மருத் துவமனை செயல் இழந்தால் அவர்கள் உயிரிழக்கலாம் என அவர் தெரிவித்துள்ளார். (நி-6)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### கடும் வெப்பத்தால்

# 239 குடும்பங்கள் பூநகரியில் பாதிப்பு

(கிளிநொச்சி)

**கடும் வெப்பம் மற்றும் வறட்சி காரணமாக கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலகப் பிரிவில் 239 குடும்பங்களைச் சேர்ந்த 732 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட அனர்த்தமுகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது.**

நல்லூர், செட்டியார் குறிச்சி, ஆலங்கேணி, ஞானிமடம், கொள்ளன்குறிச்சி, வட்டுவில் நாடு கிழக்கு பரமன்கிராய் போன்ற கிராம அலுவலர் பிரிவுகளை சேர்ந்த மக்கள் வறட்சி காரணமாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதனால் அவர்களுக்கு பூநகரி பிரதேச சபையினால் குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது. (நி-6)



யாழ். நீரிழிவுக் கழகத்தினால் யாழ். மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரனுக்கு நேற்று மாவட்ட சுகாதார சேவைகள்பணிமனையில் பாராட்டு விழா நடத்தப்பட்டது.

# இனிப்பு கலந்த பானங்கள் பருகுவதைத் தவிர்க்கவும்

### அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

தற்போது நிலவும் கடும் வெப்பமான கால நிலையில் செயற்கை இனிப்பு கலந்த பானங்களைக் குடிப்பதனால் பாதகமான விளைவுகள் ஏற்படும் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் ஹரித அலுத்கே தெரிவித்துள்ளார்.

செயற்கை இனிப்புப் பானங்களை குடிப்பதால் தண்ணீர் குடிக்க வேண்டிய தேவை அதிகரிக்கும் எனவும் செயற்கை இனிப்பு பானங்களில் அதிகளவு சர்க்கரை இருப்பதே இதற்குக் காரணம். வெப்பமான காலநிலையில் வெளிப்புற நடவடிக்கைகளைக் குறைப்பது மிகவும் முக்கியம் என்பதுடன், கடினமான செயல்களை முடிந்தவரை தவிர்ப்பது மிகவும் அவசியம் எனவும் அறிவுறுத்தியுள்ளார்.

தற்போதைய சூழ்நிலையில், இயற்கையான பானங்களைத் தயாரித்து பருகுவது மிகவும் அவசியம் எனவும், முடிந்த வரை குளிர்ந்த நீர், பல்வேறு வகையான பழச்சாறுகள் போன்ற இயற்கை பானங்களை அருந்துவது மிகவும் அவசியம்.

இதேவேளை, நாளொன்றுக்கு பல தடவைகள் குளிர்ந்த நீரால் உடலை நனைப்பது மிகவும் அவசியம் எனவும், ஆரோக்கியமான குழந்தைகளை முடிந்தவரை தண்ணீரில் வைத்திருப்பது அவசியம் எனவும் மேலும் தெரிவித்துள்ளார். (நி-6)

# இன்று ஒரு தகவல் 118



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## திறமைக்குப் பாராட்டு

ஒருவர் பரிசு கொடுத்தார் என்றால் என்ன அர்த்தம்? இன்னொருவருடைய திறமையைப் பாராட்டி அவர் ஏதோ ஒன்றைக் கொடுத்தார் என்று அர்த்தம். நம்முடைய திறமையைப் பாராட்டி இன்னொருவர் நமக்கு ஏதாவது கொடுத்தால் அது தான் பரிசு.

அப்படி இல்லாமல் நாம் ஒருவரிடம் போய் நின்று இது மாதிரி எனக்கு இன்ன இன்ன திறமை இருக்கிறது எனக்கு ஒரு பரிசு கொடுங்கள் என்று கேட்டு வாங்கக்கூடாது. பரிசு என்பது இன்னொருவர் வழங்குவதே தவிர நாம் வாங்குவது இல்லை. ஆனால் இப்பொழுது நடைமுறையிலே அது கொஞ்சம் வித்தியாசமாக இருக்கிறது. அதனாலே தான் நாமும் அதை அப்படியே சொல்ல ஆரம்பித்துவிட்டோம்.

இதோ இருக்காரே இவர் தான் இந்த வருடம் முதல் பரிசு வாங்கினார்! என்று சொல்வோமே தவிர இவருக்குத் தான் முதல் பரிசு வழங்கியிருந்தார்கள் என்று சொல்வதில்லை. பரிசு வாங்கியவரிடம் இதைப் பற்றிக் கேட்டால் அவர்கள் கொடுக்கவில்லை அதனால் நானே கேட்டு வாங்கினேன் என்பார்.

நியாயமான பரிசு என்பது எது? பரிசு பெறுகின்றவருக்கும் அதற்கு உரிய திறமை இருக்க வேண்டும். பரிசு வழங்குபவருக்கும் இந்தத் திறமையைப் புரிஞ்சுக்கிற ஆற்றல் இருக்க வேண்டும். இது எப்பொழுதும் எல்லா இடத்திலேயும் சரியா அமைந்து விடுவ தில்லை. அதனால் தான் சிக்கல்.

ஒரு பெரிய ராஜா இருந்தார். அந்த ஊரிலே யாரோ ஒரு பெரிய வித்தைக்காரன் இருக்கிறான் என்று கேள்விப்பட்டார். உடனே அவனை அழைத்து வரச் சொன்னார். அவனும் ராஜா அழைத் தவுடனே புறப்பட்டு அரண்மனைக்கு வந்தான். உனக்கு என்னென்ன வித்தைகள் எல்லாம் தெரியும்? என்று கேட்டார் ராஜா. மன்னா..! எனக்கு மந்திர வித்தை எல்லாம் எதுவும் தெரியாது ஆனாலும் ஒன்று இரண்டு வேடிக்கைகள் செய்வேன் என்றான்.

அப்படி என்ன தெரியும்? என்று கேட்டார் ராஜா. கயிற்றின் மேலே நடப்பேன். நீளமான ஒரு மூங்கிலை நட்டு வைத்து அதிலே தலை கீழாக ஏறி உச்சிக்குப் போவேன். அதன் நுனியிலே வயிற்றை வைத்துக் கொண்டு சக்கரம் போல் சுற்றுவேன். சிறிய வளையத்திற்குள்ளே புகுந்து வெளியே வருவேன். நான்கு காலில் மாடு நடப்பதைப் போல நடப்பேன். மாட்டைப் போலவே கத்துவேன். ஒரே தடவையிலே ஒன்பது குட்டிக்கரணம் போடுவேன். என்று மிகவும் அடக்கமாகச் சொன்னான் அந்த வித்தைக்காரன்.

ராஜாவிற்கு மிகவும் சந்தோசம். உடனே சொன்னார். அப்படியா..! சரி வருகின்ற வெள்ளிக்கிழமை மாலை நான்கு மணிக்கு நீ இங்கே வா! நம் அரண்மனைக்கு எதிரே உள்ள மைதானத்தில் உன்னுடைய வித்தையைக் காட்டு நமது ஊர் மக்களும் அதைப் பார்த்து சந்தோசப்பட்டும் என்றார் ராஜா. சரி மகாராஜா! என்று சொல்லி விட்டு அவன் போய்விட்டான்.

அடுத்த வெள்ளிக்கிழமை சரியாக நான்கு மணிக்கு வித்தை ஆரம்பித்தது. ஒரு பெரிய சிம்மாசனத்திலே உட்கார்ந்து ராஜா வித்தையைப் பார்த்துக் கொண்டு இருந்தார். பொது மக்கள் பலரும் சுற்றி இருந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள். அந்த வித்தைக்காரன் ஒவ்வொரு வித்தையாக செய்து காட்டிக் கொண் டிருந்தான். மாடு மாதிரி நடிக்க ஆரம்பித்தான். ம்மா..ம்மா.. என்று மாடு மாதிரி கத்திக் கொண்டே சுற்றிச் சுற்றி வந்தான். அப்பொழுது அந்தக் கூட்டத்திலே இருந்த மாடு மேய்க்கிற சின்னப் பையன் ஒருவன் ஒரு சிறிய கல்லை எடுத்து அந்த வித்தைக்காரன் முதுகிலே லேசாகப் போட்டான். அடுத்த வினாடியே அந்தச் சிறுவன் சபாஷ் என்று சொல்லி பாராட்டவும் செய்தான்.

வித்தைக்காரனும் ஏன் என் முதுகிலே கல்லைப் போட்டாய் என்று கோபப்படவில்லை! அவனுக்கும் சந்தோசம். வித்தை எல்லாம் முடிந்தது. எல்லோரும் கை தட்டினார்கள். ராஜா அவனை அழைத்தார். ஒரு முத்து மாலையைப் பரிசாகக் கொடுத்தார். அதற்குப் பின்பு அந்த மாடு மேய்க்கிற சின்னப் பையன் ஓடி வந்தான். தன்னுடைய தோளிலே கிடந்த கிழிந்த கம்பளியை எடுத்து அந்த வித்தைக்காரனுக்குப் பரிசாகக் கொடுத்தான்.

அந்த வித்தைக்காரன் ராஜா கொடுத்த முத்து மாலையை விட இந்தப் பையன் கொடுத்த கிழிந்த கம்பளியைத் தான் பெரிதாக நினைத்தான். அதைக் கண்ணிலே ஒற்றிக் கொண்டான். அந்த மாடு மேய்ப்பவன் காலைத் தொட்டுக் கும்பிட்டான். ராஜாவிற்கும் மற்றவர்களுக்கும் ஒன்றும் புரியவில்லை. வித்தைக்காரன் விவரத்தைச் சொன்னான்.

மகாராஜா! இந்த சின்னப் பையன் தான் என்னுடைய திறமையை நன்றாக புரிந்து வைத்திருக்கிறார். நான் மாடு மாதிரி நடித்த போது ஒரு சிறிய கல்லை எடுத்து என் முதுகிலே போட்டார். மாட்டு உடம்பிலே ஏதாச்சும் பட்டால் உடனே அது அந்த இடத்தை மட்டும் சுளிக்கும். இந்தப் பையன் கல்லைப் போட்ட போது நான் அது மாதிரியே கல்பட்ட இடத்தை மட்டும் சுளித்துக் காட்டினேன். அதைப் பார்த்து விட்டு சபாஷ் என்று சொன்னார். அதனால் தான் அவர் கொடுத்தது கிழிந்த கம்பளமாக இருந்தாலும் என்னுடைய திறமையைப் புரிந்து கொண்டு கொடுத்ததனால் தான் அது எனக்கு பெரிதாக தெரிகின்றது! என்றாராம்.

அந்தக் காலத்து ராஜா இதைக் கேட்டதும் கோபப்படவில்லை. அந்த சின்னப் பையனைக் அழைத்தார். அவனுக்கும் ஒரு முத்துமாலையைப் பரிசாகக் கொடுத்தார். அர்த்தமுள்ள பாராட்டு, பரிசு என்றால்வி இது தான். மற்றது எல்லாம் சும்மா!

பாராட்டிலே இன்னுமோர் வகை உண்டு. ஒரு பெரியவர் விருந்துக்குப் போனாராம். சாப்பிடுவதற்கு முன்பே ஆகா! விருந்து சாப்பாடு என்ன ருசி! என்ன சுவை! ரொம்ப பிரமாதம் இது மாதிரி என் வாழ்நாளிலே சாப்பிட்டதே இல்லை என்று பாராட்டினாராம். இன்னும் சாப்பிடவே இல்லை அதற்குள்ளே பாராட்டி விட்டீர்கள்? என்று மற்றவர்கள் கேட்டார்கள்.

அதற்கு இவர் சாப்பிட்ட பின்பு பாராட்ட முடியுதோ இல்லையோ சொல்ல முடியாது! அதனால் தான் முன்பே பாராட்டி விட்டேன் என்று அதற்கு விளக்கம் கொடுத்தாராம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காற்றாலை உயர்மின் திட்டத்திற்கான அமைச்சரவை அங்கீகாரத்தை ஏற்கமுடியாது

## எதிர்ப்புப் போராட்டத்திற்கு தயார்

### மன்னார் பிரஜைகள் குழு

**(மன்னார்)**

**மன்னார் தீவில் அதானி நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படவுள்ள 52 காற்றாலை உயர் மின் திட்டத்திற்கு இலங்கை அமைச்சரவையினால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளமை ஏற்றுக் கொள்ள முடியாது என மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை சந்தியோகு மாக்கஸ் அடிகளார் தெரிவித்துள்ளார்.**

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் நேற்று புதன் கிழமை மதியம் ஊடக சந்திப்பு இடம்பெற்றது. இதன் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் தீவில் மீண்டும் முன்னெடுக்கப்படவுள்ள குறித்த திட்டத்தினால் எமக்கு வர உள்ள அழிவுகள் குறித்து நாங்கள் பல வருடங்களாக கூறி வருகிறோம். குறித்த திட்டத்தினால் எமது வாழ்விடம் திட்டமிட்டு பறிக்கப்பட உள்ளது.

எமது பண்பாடு மற்றும் வரலாற்றுச் சுவடுகள் அழிக்கப்பட போகின்றது. மக்களின் வாழ்விடங்கள் அழிக்கப்பட்டு மக்கள் வாழ முடியாத நிலைக்கு தள்ளப்படப் போகிறது. மாணவர்களின் கல்வி மற்றும் அவர்களின் எதிர்கால நல வாழ்வும் பாதிக்கப்படும் நிலை ஏற்படும்.

எமது வளமான மண் அழிக்கப்பட்டு, எதுவும் அற்ற ஒரு நிலைக்கு தள்ளப்படும். எனவே எமது மக்களை ஒன்று கூட்டி பாரிய எதிர்ப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்க நாங்கள் தள்ளப்பட்டுள்ளோம்.

இவ்விடயம் குறித்து ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு சென்று அவரது முடிவை நாங்கள் எதிர்பார்க்க உள்ளோம். மன்னார் தீவில் உள்ள மக்களின் நலனை கருத்தில் கொண்டு ஜனாதிபதி நல்லதொரு தீர்வை வழங்குவாராக இருந்தால் எதிர்ப்பு போராட்டங்கள் கைவிடப்படும்.

எமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாமல் விட்டால் எமது எதிர்ப்பை வெளிப்படுத்த வேண்டிய நிலை ஏற்படும். மன்னார் தீவில் இருந்து ஒரு துண்டு நிலத்தை கூட நாங்கள் இத்திட்டங்களுக்கு வழங்க மாட்டோம்.

மேலும் கனிய மணல் அகழ்வினால் எமது மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. மக்களுக்கு போதிய விளக்கம் இன்மையினால் மக்களிடம் இருந்து திட்டமிட்ட வகையில் காணிகள் அபகரிக்கபடுகிறது.

மேலும் சுமார் 500 ஏக்கர் வரையிலான காணிகள் காணி உரிமையாளர்களிடம் கனிய மணல் அகழ்வுக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

எனவே குறித்த திட்டங்களையும் நாங்கள் முற்று முழுதாக எதிர்க்கின்றோம். என அவர் மேலும் தெரிவித்தார். (நி-6-285)


---

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3111


### சாளினி




### சுஜீபா





### கஜன்




### சர்மிலா




### சிந்துஜன்




### துஷா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 476





"இந்தக் கடுகுக்கு நீ பயப்பட்டால் பெரிய பெரிய பூசணிக்காய்களை எப்படி விழுங்குவாய்? எங்களுடன் நீ சேர்வதாயிருந்தால்" "உங்களுடன், என்கிறீர்கள்? நீங்கள் யார்?"

ரவிதாஸன் தேவராளனைப் பார்த்து, "இனி இவனிடம் இரகசியம் தேவை இல்லை. ஒன்று, இவன் நம்முடன் சேரவேண்டும். அல்லது கடலுக்குப் பலியாக வேண்டும். ஆகையால் இவனிடம் எல்லாம் சொல்லி விடலாமே!" என்றான்.

"எல்லாவற்றையும் நன்றாய்ச் சொல்லு!" என்றான் தேவராளன்.

"கேள், தம்பி! நாங்கள் வீர பாண்டிய மன்னருடைய ஆபத்துதவிகள், 'அவரைக் காத்து நிற்பதாக ஆணையிட்டுச் சபதம் செய்தவர்கள்."

"உங்களால் அது முடியவில்லை! ஆதித்த கரிகாலர் வெற்றி பெற்றார்."

"எப்படி வெற்றி பெற்றார்? ஒரு பெண் பிள்ளையின் மூடத்தனத்தினால் வெற்றி பெற்றார். அவள் தன் மோகவலையின் சக்தியில் அதிக நம்பிக்கை வைத்திருந்தாள். அந்தச் சோழ குல நாகப் பாம்பைத் தன்னால் படம் எடுத்து ஆடச் செய்ய முடியும் என்று நம்பினாள். பாம்பு படம் எடுத்து ஆடத்தான் ஆடியது. ஆனால், அதன் விஷப் பல்லின் சக்தியை நடுவில் காட்டி விட்டது. எங்கள் மன்னரின் தலை புழுதியில் உருண்டது. தஞ்சாவூர் வரையில் கொண்டு போனார்கள். தலையைப் பல்லக்கில் வைத்து ஊர்வலம் விட்டார்கள். ஆகா! தஞ்சாவூர்! தஞ்சாவூர்! அந்த நகரம் அடையப் போகிற கதியைப் பார்த்துக் கொண்டிரு தம்பி!"

இவ்விதம் கூறியபோது ரவிதாஸனுடைய சிவந்த அகன்ற கண்கள் மேலும் அகன்று அனலைக் கக்கின. அவனுடைய உடல் நடுங்கியது. பல் வரிசைகள் ஒன்றோடு ஒன்று உராயும் சப்தம் நறநறவென்று பயங்கரமாய்க் கேட்டது. தேவராளனுடைய தோற்றமும் அவ்விதமே கோரமாக மாறியது.

"போனது போயிற்று அதற்காக இனிமேல் என்ன செய்யப் போகிறீர்கள்? இறந்து போன வீர பாண்டியனை உயிர்ப்பிக்க முடியுமா?"

"வீரபாண்டியரை உயிர்ப்பிக்க முடியாது. அவ்வளவு சக்தி என்னுடைய மந்திரத்துக்கு கூடக் கிடையாது. ஆனால், அவரைக் கொன்றவனையும், அவனைச் சேர்ந்தவர்களையும் பூண்டோடு அழித்துப் பழிக்குப் பழி வாங்குவோம். சோழகுலப் பாம்பு வர்க்கத்தைக் குஞ்சு குழந்தைகள் உட்பட நாசம் செய்வோம். எங்களுடன் நீ சேர்க்கிறாயா? சொல்!"

"சோழ குலத்தை நாசம் செய்த பிறகு? அப்புறம் என்ன செய்வீர்கள்?"

"எங்கள் மகாராணி யாருக்குப் பட்டம் சூட்டச் சொல்கிறாளோ, அவனுக்குச் சூட்டுவோம்."

"மகாராணி யார்?" "தெரியாதா, தம்பி! பழுவூர் இளையராணியாக இப்போது நடிப்பவள்தான்!"

"அப்படியானால் மதுராந்தகருக்கு." "அவனும் ஒரு பாம்புக் குட்டிதானே?" "பழுவேட்டரையர்?"

"ஆ! அந்தக் கிழவனை எங்கள் அரசனாக்குவோம் என்றா நினைக்கிறாய்? அவனுடைய செல்வாக்கையும் பணத்தையும் உபயோகப் படுத்துவதற்காக"

"உங்கள் மகாராணி அவன் வீட்டில் இருக்கிறாளாக்கும்!" "நன்றாகத் தெரிந்து கொண்டாயே? நல்ல யூகசாலி நீ!"

"வீரபாண்டியனுடைய மரணத்துக்குக் காரணம் ஒரு பெண்பிள்ளை என்று சொன்னீர்களே?"

"அதுவும் பழுவூர் ராணிதான்! போரில் காயம் பட்டுக் கிடந்த வீரபாண்டியரைத் தான் காப்பாற்றுவதாக அவள் வாக்களித்தாள். அதை நிறைவேற்றவில்லை.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## நேர்மை



இலுப்பூர் என்ற ஊரில் ராமன், சோமன் என்று இரு நண்பர்கள் இருந்தனர். இருவரும் ஓரளவு படித்திருந்த போதிலும், எவ்வித உத்தியோகமும் கிடைக்காமல், தம் ஊரில் ஏதேதோ வேலைகளைச் செய்து பிழைத்து வந்தனர்.

ராமன் தனக்குக் கிடைக்கும் வருமானம் போதாமல் போனதால் கோபம் கொண்டு அந்தக் கோபத்தைத் தன் மனைவி, மக்கள் மீது காட்டி வந்தான். சோமனோ தனக்குக் கிடைத்ததைக் கொண்டு திருப்தி அடைந்து வாழ்க்கை நடத்தி வந்தான்.

ஒருநாள் ராமன், சோமனிடம், "சோமா! நமக்கு திடீரென ஒரு புதையல் கிடைத்தால், எவ்வளவு நன்றாக இருக்கும்?" என்று கேட்டான்.

"ராமா! இப்படியெல்லாம் நினைக்காமல் பாடுபட்டு நேர்மையாக இருந்து பணம் சேர்... அதுதான் நல்லது," என்றான் சோமன்.

சில நாட்களுக்குப் பிறகு ராமனும், சோமனும் ஏதோ ஒரு வேலையின் பொருட்டு, பட்டணத்திற்குக் கிளம்பினர். வழியில் ஒரு பை கிடந்ததைக் கண்ட ராமன் மகிழ்ச்சியுடன் அதனை எடுத்து வந்தான்.

அதில் ஐம்பது ஆயிரம் இருப்பது கண்டவன், "ஆகா! என் அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம். இதனால் எவ்வளவு சந்தோஷப்படுகிறேன் தெரியுமா? கடவுளே என் நிலையைப் பார்த்து இதை எனக்குக் கொடுத்திருக்கிறார். இதை நாம் இருவரும் சமமாகப் பங்கிட்டுக் கொள்ளலாம்," என்றான்.

சோமனோ, "வேண்டாம். இது யாரோ தொலைத்து விட்ட பணம். நாம் இப்போதைய கிராம அதிகாரியிடம் ஒப்படைத்து விட்டால், அவர் விசாரித்து இதை உரியவரிடம் சேர்த்து விடுவார். அதனால், பணம் உரியவரிடம் சேர்ந்து விடும். மற்றவர் பணத்துக்கு நாம் ஆசைப்படக் கூடாது. நாமே உழைத்துப் பணம் சம்பாதித்து கிடைத்ததைக் கொண்டு திருப்தியுடன் வாழ்வது தான் நல்லது, என்றான்.

ராமனோ முடியாது எனக்கு கிடைத்ததை நான் ஏன் கொடுக்க வேண்டும்? வழியில் எனக்கு கிடைத்தது. இது யாருக்குச் சொந்தம் என்பதும் எனக்குத் தெரியாது. பணம் கிடைத்த போதும், நீயும் என்னுடன் இருந்தாய் அதனால் உனக்கும் நான் பங்கு கொடுத்தே ஆக வேண்டும். அதனால், நீ பாதிப் பணத்தை வாங்கிக்கொள், என்று இருபத்தைந்து ஆயிரத்தை அவது பையில் திணித்தான். சோமன் பதில் பேசாமல் இருந்தான்.

ராமன் பட்டணத்திற்கு சென்று தன் மனைவிக்கும், குழந்தைகளுக்கும் துணிகளை வாங்கினான். சோமன் எதுவும் வாங்கவில்லை.

இந்த சம்பவம் நிகழ்ந்த ஒரு மாதத்திற்கு பின் சோமன், ராமனிடம் சென்று ராமா எனக்கு பட்டணத்தில் உத்தியோகம் கிடைத்து விட்டது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர்மையால் சுத்திகரிக்கப்பட்ட மனச்சாட்சியே,
அனைத்திலும் மதிப்பு வாய்ந்த பொக்கிஷம் ஆகும்.
– அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## சட்டவிரோத கொல்களம் பின்னணியில் யார் உளர்

இந்தியாவின் உள்நாட்டு உற்பத்தியில் பசும்பால் உற்பத்தி கணிசமான இடத்தைப் பிடித்துள்ளது.

அந்தளவுக்கு அங்கு பசு வளர்ப்பு மிகப் பெரும் தொழில் முயற்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தவிர, பசும்பாலை பைக்கற்றுகளில் அடைத்து அதிகாலைப் பொழுதில் வீடுகள் தோறும் விநியோகிக்கின்ற நடைமுறைகளும் உண்டு.

சுருங்கக்கூறின் இந்திய மக்களின் நுகர்வில் பால்மாக்கள் மிக மிகக் குறைவு எனலாம். மாறாக ஒட்டுமொத்த இந்திய மக்களும் நாளாந்தம் பசும்பாலை நுகர்கின்றனர்.

அந்தளவுக்கு அங்கு பசும். பால் உற்பத்தி தாராளமாக உள்ளது.

இதன் காரணமாக இந்தியாவில் செல்வந்தர்களாக இருப்பவர்களில் பலர் மாடு வளர்ப்பில் ஈடுபடுபவர்களாகக் காணப்படுகின்றனர்.

ஆனால் எங்கள் இலங்கையில் அதிலும் குறிப்பாக, வடபகுதியில் கால்நடை உள்ளிட்ட மாடு வளர்ப்பு என்பது மிகமிகச் சொற்பம் எனலாம்.

தவிர, மாடு வளர்ப்பவர்கள் நம் மண்ணில் வறுமை நிலையில் இருப்பதையும் அவதானிக்க முடியும்.

இதற்குக் காரணம் என்னவென ஆராய்ந்தால், மாடு வளர்ப்புத் திட்டம் இங்கு ஊக்குவிக்கப்படவில்லை.

தவிர, வளர்க்கின்ற மாடுகள் எந்த நேரத்திலும் களவாடப்படலாம் என்ற நிலைமையும் உண்டு.

இதனையும் கடந்து, மாடுகளுக்கு நோய் ஏற்படும்போது அவற்றுக்கான சிகிச்சைகளை உடனடியாகப் பெறமுடிவதில்லை. இதனால் மாடுகள் இறந்துபோக, சம்பந்தப்பட்ட குடும்பம் மூன்று நான்கு இலட்சம் ரூபாய் பெறுமதியான மாட்டை மண்ணுக்குள் புதைக்கின்ற பரிதாபத்துக்கு ஆளாகிறது.

தவிர, அந்தக் குடும்பத்தின் ஜீவனோபாயத்துக்கு உறுதுணையாக இருந்த மாடு இறந்துபோக, அந்தக் குடும்பத்தின் நாளாந்தச் சீவியம் கேள்விக்குறியாகிறது.

இவ்விதம் மாடு வளர்ப்பவர்கள் படுகின்ற கஷ்டங்களை அவதானிக்கும்போது, மாடு வளர்க்க வேண்டும் என்ற எண்ணம் எவருக்கும் ஏற்படாதென்பதுதான் யதார்த்தம்.

ஆனால், உண்மையில் மாடு வளர்ப்பு என்பது மிக உயர்ந்த வருமானத்தைத் தரக்கூடிய வேளாண் செய்கையின் ஒரு பிரிவாகும்.

உரிய முறைப்படி மாடு வளர்ப்புத் திட்டம் மேற்கொள்ளப்பட்டால், அந்த முயற்சியில் ஈடுபடுகின்றவர்கள் கணிசமான வருமானத்தை உழைக்க முடியும்.

இருந்தும் நிறுவனமயப்படுத்தப்பட்ட ஊக்குவிப்பு நடவடிக்கைகள் இல்லாத காரணத்தால், வடபகுதியில் பசு வளர்ப்பு முயற்சி மிகவும் மந்த நிலையிலேயே உள்ளது.

இதற்கும் மேலாக, அண்மையில் யாழ்ப்பாணத்தில் சட்டவிரோதமாக மாடு வெட்டுகின்ற இரண்டு கொல்களங்கள் கண்டறியப்பட்டுள்ளன.

என்ன செய்வது, மாடு வளர்ப்பதற்கான ஊக்குவிப்புக்கள் இல்லாத வடபுலத்தில் மாடுகளைச் சட்டவிரோதமாக வெட்டுகின்ற கொல்களங்கள் உள்ளதெனில், இதன் பின்னணியில் யார் உளர்? என்பதுதான் நம் கேள்வி.

# 30 மில்லியன் சிவப்பு அறிவித்தல்கள்
# ஒரு இலட்சத்துக்கு அதிகமானோரின் மின் இணைப்புகள் துண்டிப்பு

2022ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் மின்சாரக் கட்டணங்கள் தாமதமாக செலுத்தியதன் காரணமாக சுமார் 30 மில்லியன் சிவப்பு பற்றுச்சீட்டுக்கள் வழங்கப்பட்டுள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் கெவிந்து குமாரதுங்கவினால் பாராளுமன்றத்தில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

மேலும் கருத்து தெரிவித்த கஞ்சன விஜேசேகர,

உரிய நேரத்தில் மின் கட்டணம் செலுத்தாத காரணத்தால் 1.3 மில்லியன் நுகர்வோரின் மின் இணைப்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன.

அத்துடன், 126,000 இற்கும் அதிகமான நுகர்வோரின் கணக்குகள் முடக்கப்பட்டுள்ளன. இதில் சுமார் 19 இலட்சம் புதிய மின் இணைப்புகள் பெறப்பட்டுள்ளன.

இலங்கையில் தற்போது 7.2 மில்லியனுக்கும் அதிகமான மின்சார பாவனையாளர்கள் உள்ளனர் எனவும் தெரிவித்தார். (ம-7,10)

## பன்றி இறைச்சி உண்ட இரு சிறைக் கைதிகள் மரணம்

(கொழும்பு)

பன்றி இறைச்சி சாப்பிட்ட மகசின் சிறைக் கைதிகளில் இருவர் உயிரிழந்துள்ளதுடன்,

மற்றுமொரு கைதி ஆபத்தான நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பொரளை மற்றும்தெஹிவளை பிரதேசங்களைச் சேர்ந்த இருவரே உயிரிழந்துள்ளதாகவும்,

ஐஸ் போதைப்பொருள் வைத்திருந்த குற்றத்திற்காக இவர்கள் கைது செய்யப்பட்டிருந்ததாகவும் பொரளை பொலிஸார் தெரிவித்தனர்.

பொரளை பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட சந்தேகநபர் ஒருவர் மெகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்ட நிலையில்,

குறித்த கைதியின் வீட்டிலிருந்து பன்றி இறைச்சியுடன் சோறு பொதி கொண்டுவரப்பட்டுள்ளது.

இதை 15 கைதிகளுடன் சேர்ந்து சாப்பிட்டனர், அதன் பிறகு மூன்று கைதிகள் நோய்வாய்ப்பட்டு சிறைச்சாலை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

இவர்களில் இரண்டு கைதிகள் உயிரிழந்துள்ளதுடன் ஒருவர் ஆபத்தான நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

எவ்வாறாயினும், பன்றி இறைச்சிக் கறியை உண்டதால் ஏற்பட்ட ஒவ்வாமையா என்பது தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக,

சிறைச்சாலைகள் ஆணையாளரும் ஊடகப் பேச்சாளருமான காமினி பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

எனினும்அதை உண்ட ஏனைய 12 பேருக்கு ஒவ்வாமை ஏற்படவில்லை என பேச்சாளர் தெரிவித்துள்ளார். எவ்வாறாயினும், இது தொடர்பான முதற்கட்ட விசாரணைகள் பொரளை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன்,

உயிரிழந்தவர்களின் பிரேத பரிசோதனைகள் பொலிஸ் பிரேத அறையில் இடம்பெற்றன.

(ம-7,10)

## போலி நகைகளை வைத்து வங்கியில் ரூ. 17 இலட்சம் மோசடி இருவர் கைது

(கொழும்பு)

போலியான ஆவணங்களைப் பயன்படுத்தி நகைகளை அரச வங்கி ஒன்றில் அடகு வைத்து பணம் பெற்ற இருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த வங்கியிலிருந்து கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில் தனமல்வில பொலிஸாரால் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

குறித்த இரண்டு நபர்களும் போலி மோதிரங்களை அடகு வைத்து 17 இலட்சத்து 9,000 ரூபா பணத்தைப் பெற்றுள்ளனர்.

இவர்கள் பல முறை பத்து போலி மோதிரங்களை வங்கியில் அடகு வைத்துள்ளமை விசாரணையில் தெரியவந்துள்ளது. (ம-7,10)

## ரூ.41 இலட்சம் பெறுமதியான பொருட்களை திருடிய மூவர் கைது

கடந்த ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி இரவு மொரட்டுவை பிரதேசத்தில் வீடொன்றை உடைத்து 41 இலட்சம் ரூபா பெறுமதியான சொத்துக்களைத் திருடித் தப்பிச்சென்றதாகக் கூறப்படும்,

மூன்று சந்தேக நபர்கள் மொரட்டுவை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த திருட்டு சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மொரட்டுவை பிரதேசத்தைச் சேர்ந்த 23,25 மற்றும் 29 வயதுடைய மூவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

விசாரணையில் சந்தேக நபர்களிடமிருந்து 5 கிராம் 720 மில்லி கிராம் ஹெரோயின் போதைப் பொருள்,

5 கிராம் 460 மில்லி கிராம் ஹெரோயின் போதைப்பொருள்,

3 கைக்கடிகாரங்கள், 2 கையடக்க தொலைபேசிகள் உள்ளிட்ட பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மொரட்டுவை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(ம-7,10)

## வயோதிபமாது ஒருவரின் தொலைபேசி கொள்ளை மூவருக்கு 6 மாத கடூழிய சிறை

வயோதிப மாது ஒருவரின் தொலைபேசியை கொள்ளையிட்ட மூவருக்கு 10 வருடங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்ட ஆறு மாத கால கடூழிய சிறைத் தண்டனையை விதித்து பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதிவான் கிருசாந்தன் பொன்னுதுரை உத்தரவிட்டார்.

2023 ஆம் ஆண்டு முதலாம் மாதம் 23ஆம் திகதி அன்று யாழ்ப்பாணத்திலிருந்து தும்ப [illegible] மூவர் அவ் வீதி ஊடாக சென்று கொண்டிருந்த வயோதிபமாது ஒருவரின் தொலைபேசியினை கொள்ளையிட்டுள்ளனர்.

இது தொடர்பில் உடனடியாக பருத்தித்துறை பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. உடனடியாக அவர்கள் மூவரும் கைது செய்யப்பட்டு தொலைபேசியும் உடமையில் இருந்து மீட்கப்பட்டது. இது தொடர்பாக பருத்தித்துறைப் பொலிஸாரால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

நீதிமன்றில் குற்றத்தை மூவரும் ஒப்புக் கொண்டிருந்தனர். இந் நிலையில் வழக்கின் தீர்ப்பு நேற்று புதன் கிழமை வழங்கப்பட்டது. இதில் முதலாவது குற்றமாக கொள்ளை அடித்ததற்கு 1500 ரூபாய் தண்டப் பணம் விதிக்கப்பட்டுள்ளதுடன் அதை செலுத்த தவறினால் ஒரு மாத கால சாதாரண சிறை தண்டனையும், இரண்டாவது குற்றமாக கொள்ளையிட்ட பொருளை உடமையில் வைத்திருந்ததற்காக 1500 ரூபாய் தண்டப்பணமும் அதை செலுத்தத் தவறினால் ஒரு மாத கால சாதாரண சிறை தண்டனையும் விதிக்கப்பட்டது. மேலும் 10 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஆறு மாத கால கடூழிய சிறை தண்டனையை விதித்து நீதவான் உத்தரவிட்டார்.

மேலும் பாதிக்கப்பட்ட வயோதிப மாதுவிற்கு மூவரும் தலா 50 ஆயிரம் ரூபாய் நட்ட ஈடு செலுத்துமாறு தீர்ப்பில் நீதவான் உத்தரவிட்டார்.(ம-7,10,60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிக நேரம் உறங்கும் நாடுகளில் இலங்கைக்கு 3 ஆம் இடம்



(கொழும்பு)

உலகில் அதிக நேரம் உறங்கும் நாடுகளின் தர வரிசையில் இலங்கை 3 ஆவது இடத்தைப் பிடித்துள்ளது.

அதன்படி, இலங்கையில் வாழும் மக்கள் சராசரியாக இரவில் 8.1 மணிநேரம் உறங்குவதாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

உலகில் உள்ள 60 நாடுகளில் வாழும் மக்களின் சராசரி உறக்கத்தின் அளவை அடிப்படையாகக் கொண்டு, உலகில் எந்த நாட்டில் மக்கள் ஒரு இரவில் அதிக அளவு உறங்குகிறார்கள் என்பதைக் கண்டறிய ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதேவேளை, ஒவ்வொரு இரவும் சராசரியாக எந்த நகரத்தில் மக்கள் அதிகம் உறங்குகிறார்கள் என்பதை கண்டறிய ஐக்கிய இராச்சியத்தின் 40 நகரங்களில் இந்த ஆய்வும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறு மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் அடிப்படையில் பல்கேரியா, அங்கோலா மற்றும் இலங்கை ஆகிய நாடுகள் உலகில் அதிக நேரம் உறங்கும் நாடுகளின் தரவரிசையில் முதல் மூன்று இடத்தைப் பெற்றுள்ளது.

அத்துடன் ஐக்கிய இராச்சியத்தின் நகரங்களின் தரவரிசையில் நார்விச் நகரம் முதலாமிடத்தை பெற்றுள்ளது. (நி-6)

# சிறுநீரக நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

## சுகாதார அமைச்சர் பத்திரண

(கொழும்பு)

**இலங்கையில் ஆண்டுதோறும் சிறுநீரக நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்வதாக சுகாதார அமைச்சர் ரமேஸ் பத்திரண தெரிவித்துள்ளார்.**

ஒவ்வொரு ஆண்டும் நாட்டில் சிறுநீரக நோயாளர்களின் எண்ணிக்கை மூவாயிரத்தினால் அதிகரித்துச் செல்வதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 2015 ஆம் ஆண்டில் 30 657 ஆக காணப்பட்ட சிறுநீரக நோயாளர்களின் எண்ணிக்கை ,2023 ஆம் ஆண்டில் 72 546 ஆக உயர்வடைந்துள்ளது என எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக்க பாராளுமன்றில் கேள்வி எழுப்பியிருந்தார்.



எனவே இவ்விடயத்தில் அதிக கவனமெடுத்து சுகாதார அமைச்சு பல்வேறு நடவடிக்கைகளை நாடு முழுவதிலும் முன்னெடுக்கவுள்ளது என அமைச்சர் ரமேஷ் பத்திரண மேலும் தெரிவித்தார். (நி-6)

# குருப்பெயர்ச்சிப் பலன்கள் 01.05.2024-13.04.2025



சூரியனை ராசிநாதனாகக் கொண்ட சிம்ம ராசி அன்பர்களே!

நீங்கள் தன்மானம் அதிகம் கொண்டவர்கள். கிரகநிலை: பாக்கிய ஸ்தானத்தில் இருந்து தொழில் ஸ்தானத்திற்கு குரு மாறுகிறார். உங்களது தனவாக்கு ஸ்தானம் - சுக ஸ்தானம் - ரண ருண ரோக ஸ்தானம் ஆகியவற்றைப் பார்க்கிறார்.

**மேஷத்தில் இருந்து ரிஷபத்துக்கு:** நிகழும் மங்களகரமான ஸ்வஸ்திஸ்ரீ குரோதி வருஷம் உத்தராயணம் வஸந்த ரிது சித்திரை மாதம் 18 ஆம் நாள் இதற்குச் சரியான ஆங்கில திகதி, 01.05.2024 அன்றைய தினம் கிருஷ்ணபக்ஷ அஷ்டமியும் - புதன் கிழமையும் - திருவோண நட்சத்திரமும் - சுப நாமயோகமும் - பவ கரணமும் - நினைப்பார்கள். மற்றப்படி மனதில் ஊக்கத்தை ஏற்படுத்திக்கொண்டு செயற்படுவீர்கள். கடினமாக முயற்சி செய்து உங்கள் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வீர்கள். உடல் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். குடும்பத்திலும் மருத்துவச் செலவுகள் ஏற்படாது. யாரையும் புண்படுத்தாமல் உங்கள் அணுகுமுறையால் வெற்றி பெறுவீர்கள்.

குடும்பத்தில் பாகப்பிரிவினை சுமுகமாக நடக்கும். அசையாச் சொத்துக்களிலிருந்து வருமானம் வரத் தொடங்கும். பல விடயங்களை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள். மறைமுக எதிர்ப்புகள் நீங்கும். வழக்கு விவகாரங்களில் திடீர் திருப்பங்கள் ஏற்படும். குறைந்த உழைப்பிலும் அதிக ஆதாயம் கிடைக்கும். அதேசமயம் புறம் பேசுபவர்களை இனம் கண்டு ஒதுக்கவும். குடும்பத்தில் ஏற்படும் சில அநாவசியப் பிரச்சினைகளைக் கண்டும் காணாமல் இருக்கவும். செய்தொழிலில் எதிர்பார்த்த வருமானம் கிடைக்கும். நவீன பொருட்களை வாங்கி இல்லத்தை அலங்கரிப்பீர்கள். முன்பின் அறிமுகம் இல்லாதவர்களுக்கும் உதவி செய்து பெருமையடைவீர்கள். மற்றப்படி அலைச்சல் தரும் வேலைகளைக் குறைத்துக்கொள்ளவும். அநாவசியப் பயணங்களையும் தவிர்க்கவும்.

உத்தியோகஸ்தர்களுக்கு அலைச்சலும் வேலைப்பளுவும் அதிகரித்தாலும் உங்கள் வேலைகள் மேலதிகாரிகளின் பாராட்டுகளைப் பெறும். உங்களின் ஆற்றல் அதிகரிக்கும். அலுவலக ரீதியான பயணங்கள் திருப்பங்களைக் காண்பீர்கள். கட்சி மேலிடத்தின் பாராட்டைப் பெறுவீர்கள். இதனால் உங்களுக்கு புதிய பதவிகள் கிடைக்கும். எதிரிகளும் உங்களிடம் அடங்கியே நடப்பார்கள். கலைத்துறையினரைத் தேடிப் புதிய ஒப்பந்தங்கள் வரும். ஆனாலும் ரசிகர்களின் ஆதரவு குறைந்தே காணப்படும். எனவே ரசிகர் மன்றங்களுக்கு செலவு செய்து அவர்களை உற்சாகப்படுத்தவும். தொழிலில் கவனமும், செயற்பாட்டில் நிதானமும் தேவை.

பெண்மணிகளுக்கு குழந்தைகளால்




பெருமை உண்டாகும். அதேசமயம் கணவருடன் வாக்குவாதங்கள் ஏற்படலாம். அதனால் பொறுப்புடனும், நிதானத்துடனும் நடந்துகொள்ளவும். மற்றப்படி பொருளாதார நிலையில் எந்தக் குறைவும் ஏற்படாது. எனவே ஆடை, அணிகலன்களை வாங்கி மகிழ்வீர்கள். மாணவமணிகள் படிப்பில் கவனத்துடன் ஈடுபடவும். சிலர் முதல் தரம் வாங்குவார்கள். விளையாட்டிலும் வெற்றி பெறுவார்கள்.

**மகம்:** இந்த குரு பெயர்ச்சியால் குடும்பத்தில் இருந்த குழப்பம் நீங்கும். கணவன், மனைவிக்கிடையே இருந்த மனவருத்தம் நீங்கும். பிள்ளைகளுக்கு தேவையான பொருட்களை வாங்கி கொடுப்பீர்கள். எதிலும் கவனமாக இருப்பது நல்லது. வெளியூர்ப் பயணங்கள் மனதிற்கு மகிழ்ச்சி தரும். கவலை வேண்டாம். கடன் விவகாரங்களில் யோசித்து செயற்படுவது நல்லது. கடிதப் போக்குவரத்து மூலம் நல்ல தகவல் வரும். வீண் மனச்சஞ்சலம் ஏற்பட்டு நீங்கும். சுப்காரியங்களில் இருந்த பின்னடைவு நீங்கும். எதிர்பார்த்த பண வரவு இருக்கும். நீண்ட நாளைய ஆசை நிறைவேறும். மனதிற்கு பிடித்த காரியங்கள் நடக்கும். அனைவரிடமும் சந்தோஷமாகப் பழகுவீர்கள். மனநிம்மதி உண்டாகும்.

**பூரம்:** இந்த பெயர்ச்சியால் சாதகமான முன்னேற்றம் ஏற்படப்போவது உறுதி. நல்ல அறிமுகம் கிடைக்கப் பெற்று முன்னேற்றம் உண்டு. கிடைக்கும் வாய்ப்புகளை பயன்படுத்தி கொள்ள வேண்டும். வியாபாரிகளுக்கு நெடுநாட்களாக இருந்து வந்த கடன்கள் தீரும். கூட்டு வியாபாரத்தில் கணிசமான லாபம் கிடைக்கும். வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்வோருக்கு புதிய ஓடர்கள் வந்து சேரும். புதிய இட ஒப்பந்தங்கள் கைவெழுத்தாகும். தொழிற்சாலைகள் வைத்திருப்போருக்கு நல்ல லாபம் கிடைக்கும். பொதுவான விடயங்களில் தலையிடுவோருக்கு உங்கள் கருத்துக்களை மற்றவர்கள் ஆமோதிப்பார்கள். வியாபாரப் போட்டிகள் சாதகமான முடிவினைத் தேடித் தரும். கவலை வேண்டாம்.

**உத்தரம் 1ஆம் பாதம்:** இந்த குருப் பெயர்ச்சியால் உங்களின் புத்திசாதுரியம் வெளிப்படும். கல்வியில் இருந்த தொய்வு நீங்கும். குடும்பத்தில் உள்ள பிரச்சினைகள் தீர்ப்பதற்கு கவனம் செலுத்துவீர்கள். அடுத்தவர்களால் ஏற்படும் கெடுதல்கள் நீங்கும். மனதில் அமைதி பிறக்கும். உங்களது பணிகளை அடுத்தவரிடம் ஒப்படைக்காமல் நேரிடையாக செய்யுங்கள். எல்லா வகையிலும் நன்மை உண்டாகும். தனலாபம் உண்டாகும். அடுத்தவர்களுக்கு உதவி செய்வதில் ஆர்வம் காட்டுவீர்கள். நோய் நீங்கி உடல் ஆரோக்கியம் உண்டாகும். எதிர்பாலினத்தாரால் செலவு ஏற்படும். கோபத்தால் சில்லறை சண்டைகள் ஏற்படலாம். பணவரத்து கூடும். காரிய அனுகூலம் உண்டாகும்.

**பரிகாரம்:** ஞாயிற்றுக்கிழமையில் சிவன் கோவிலை 11 முறை வலம் வரவும். பிரதோஷ காலத்தில் நந்தீஸ்வரரை வணங்குவதும் வாழ்க்கையில் முன்னேற்றத்தை தரும். சமூகத்தில் அந்தஸ்து அதிகாரம் கிடைக்க பெறும் ; **சிறப்பு பரிகாரம்:** வில்வ இலைகளை அருகிலிருக்கும் சிவனுக்கு சமர்ப்பித்து அர்ச்சனை செய்து வணங்கவும். தினமும் சூரிய நமஸ்காரம் செய்யவும் ; **சொல்ல வேண்டிய மந்திரம்:** "ஓம் ஸ்ரீருத்ராய நம" என்ற மந்திரத்தை தினமும் 9 முறை சொல்லவும் ; **அதிர்ஷ்ட எண்கள்:** 1, 3, 5, 9 ; **அதிர்ஷ்ட ஹோரைகள்:** சூரியன், செவ்வாய், புதன், குரு ; அதிர்ஷ்ட **திசைகள்:** கிழக்கு, தெற்கு ; அதிர்ஷ்ட கிழமைகள்: ஞாயிறு, செவ்வாய், புதன், வியாழன்

# வருமானம் நன்றாக இருக்கும்

சித்தயோகமும் கூடிய சுபயோக சுப தினத்தில் மாலை 05.01இற்கு துலாம் லக்னத்தில் குரு பகவான் மேஷ ராசியிலிருந்து ரிஷப ராசிக்கு மாறுகிறார்.

**சிம்மம் ராசியினருக்கான குருப் பெயர்ச்சி பலன்கள்:**

குரு பகவானால் முயற்சிகள் பலசெய்து நல்ல செயல்களைச் செய்து சிறப்படைவீர்கள். குடும்பத்திலும் சிறு சலசலப்புகள் ஏற்படும். வெளியில் கொடுத்திருந்த பணம் கைக்கு திரும்பி வரத் தாமதமாகும். இதனால் அத்தியாவசியத் தேவைகளுக்குச் சிறிது கடன் வாங்க நேரிடலாம். சகோதர, சகோதரி வகையிலும் கருத்து வேறுபாடுகள் உண்டாகலாம். உங்களுக்குக்கீழ் பணிபுரிபவர்களும் உங்களுக்கு சிக்கல்களை ஏற்படுத்த களால் பண வரவு உண்டாகும். அதே நேரம் சக ஊழியர்களை நம்பி எந்த வேலையையும் ஒப்படைக்க வேண்டாம். சிலருக்கு இந்த பெயர்ச்சியால் விரும்பத்தகாத இடமாற்றங்கள் உண்டாகும்.

வியாபாரிகள் கொடுக்கல், வாங்கல் விடயங்களில் அனுகூலமான பலன்களைக் காண்பீர்கள். தொழில் ரீதியாக புதிய திருப்பங்கள் ஏற்படும். புதிய சந்தைகளை நாடிச் செல்லும்போது அதீத கவனத்துடன் செயற்பட்டு காரியமாற்றவும். கூட்டுத்தொழில் புரிவோர் சற்று உஷாராக இருப்பது நல்லது. சந்தையில் போட்டிக்குத் தகுந்தவாறு விலையை நிர்ணயம் செய்து விற்றால் நல்ல வருமானத்தைப் பெற முடியும்.

அரசியல்வாதிகள் இந்த பெயர்ச்சியின் மூலம் பொதுச்...

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழைச்...

மேற்கொண்டுள்ளார்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் பழைய மாணவரான வியாஸ்காந்த், 19 வயதுக்குட்பட்ட இலங்கையணியில் இடம்பெற்றதைத் தொடர்ந்து கவனம் பெற்று பின்னர் லங்கா பிறீமியர் லீக்கில் விளையாடியிருந்தார்.

பின்னர் பங்களாதேஷ் பிறீமியர் லீக்கில் விளையாடியதுடன் ஆசியப் போட்டிகளில் இலங்கைக்கான அறிமுகத்தை மேற்கொண்டதுடன், தொடர்ந்து ஐக்கிய அரபு அமீரக இருபதுக்கு 20 தொடரான ஐ.எல்.டி.20இலும் விளையாடியிருந்தார். (ம-7,10)

## 10 வருடங்களில்...

அதன்படி 2014-2015ஆம் ஆண்டில் 16330 கோடி ரூபாய்க்கு மேல், 2015-2016 இல் 13084 கோடி ரூபாய்க்கு மேல், 2016-2017 ல் 2800 கோடி ரூபாய்க்கு மேல், 2017-2018 இல் 417 கோடி ரூபாய்க்கு மேல், 2018-2019 இல் 2, 4413 கோடி ரூபாய்க்கு மேல், 2020-2021ல் 4970 கோடி ரூபாய்க்கு மேல், 2021-2022ல் 16358 கோடி ரூபாய், 2022-2023ல் 7130 கோடி ரூபாய் மற்றும் 2023-2024ல் 1247 கோடி ரூபாய்க்கு மேல் இழப்பு ஏற்பட்டுள்ளது.

அத்தோடு 2021-2022ல் விமான நிறுவனம் மிகப்பெரிய இழப்பைச் சந்தித்துள்ளது. அந்தக் காலகட்டத்தில் ஏற்பட்ட இழப்பு 16358 கோடி ரூபாய் எனவும் அவர் தெரிவித்தார். (ம-7,10)

## 5 மிதிவெடிகள்...

குறித்த மிதிவெடிகளை நீதிமன்ற அனுமதியுடன், குண்டு செயலிழக்க செய்யும் பிரிவினரால் அவற்றை செயலிழக்கச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ம-7,10,33)

## வாகனங்களை...

தெரிவித்தார்.

நிதி அமைச்சில் வாகன இறக்குமதியாளர்கள் சங்கத் தின் பிரதிநிதிகளுடன் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

வாகன இறக்குமதி கட்டுப்பாட்டை நீக்குதல் மற்றும் அதனூடாக ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பில் விரைவில் அறிக்கையொன்று வாகன இறக்குமதியாளர்கள் சங்கத்தினால் விரைவில் சமர்ப்பிக்கப்படும் என எதிர்பார்ப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

வாகன இறக்குமதித் துறையில் தேர்ச்சி பெற்றவர்களினால் தயாரிக்கப்படும் இந்த அறிக்கை ஊடாக வாகன இறக்குமதியை மீண்டும் ஆரம்பிப்பது குறித்து அவதானம் செலுத்தப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி, அனைத்து வாகனங்களையும் ஒரே நேரத்தில் இறக்குமதி செய்ய அனுமதி வழங்க முடியாது எனவும், பல கட்டங்களின் கீழ் வாகனங்களை இறக்குமதி செய்வது நடைமுறை சாத்தியமானது எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பொதுப் போக்குவரத்துக்கான வாகனங்கள், பயன்படுத்திய வாகனங்கள், தனிப்பட்ட பாவனைக்கான வாகனங்கள் என்ற அடிப்படையில் வாகனங்களை இறக்குமதி செய்ய எதிர்பார்ப்பதாகவும் நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியாம்பலாபிட்டிய தெரிவிக்கின்றார். (ம-7,10)

## உள்ளகப்...

தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற விவாதத்தில் உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்த எம்.ஏ. சுமந்திரன் எம்.பி. மேலும் பேசுகையில்,

இன்னுமொரு நல்லிணக்கச் செயலணியை கொண்டுவருவதை நாங்கள் எதிர்க்கின்றோம். இது செப்ரெம்பரில் வரவுள்ள ஜெனிவா அமர்வுக்கு காண்பிக்கும் ஒரு கண்துடைப்பு நடவடிக்கையாகும்.

இது தொடர்பில் நாங்கள் உலகத்திற்கு வெளிச்சம் போட்டுக்காட்டுவோம், ஒரு நிரந்தர அரசியல் தீர்வின்றி எந்தவித நல்லிணக்கமும் ஏற்பட முடியாது சர்வதேச நீதிமன்ற பொறிமுறை ரோம் சட்டத்தின் மூலம் மட்டுமே நடத்தப்படும்.

எனவே இலங்கை அரசாங்கம் ரோம் சட்டத்திற்கு இணங்க வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

இந்த மே மாதத்துடன் யுத்தம் முடிவடைந்து 15 ஆண்டுகள் நிறைவடைகின்றன. இந்த நோக்கில் பாராளுமன்றத்தில் வெளிவிவகார அமைச்சரின் தலைமையில் நல்லிணக்கத்திற்கான செயலணி தொடர்பான அரசாங்கம் முன்மொழியும் சட்டமூலம் குறித்து கட்சித் தலைவர்களுடன் கலந்துரையாடப்பட்டது. இதிலே நான் சொன்ன சில விடயங்களை இந்த சபையில் பதிவு செய்வது அத்தியாவசியம்.

அதாவது யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் விசேடமாகவும் மற்றும் யுத்த காலம் முழுவதும் பலவிதமான அத்துமீறல்கள் நடந்துள்ளன.

உலகத்தில் நடக்கும் எந்தவொரு யுத்தமும் சுத்தமானது கிடையாது. சுத்தமான யுத்தம் என்று எதனையும் அழைக்க முடியாது. ஆயுதப் போரில் அத்துமீறல்கள் நடந்தே ஆகும்.

ஆனால் அவ்வாறாக நடக்கும்போது அதனால் பாதிக்கப்படுபவர்கள் தொடர்பில் அரசாங்கத்திற்கு பொறுப்பு உள்ளது. அதாவது அத்துமீறல்கள் தொடர்பில் விசாரிப்பதற்கும் விசேடமாக காணாமலாக்கப்பட்டவர்கள் விடயத்தில் என்ன நடந்தது? யார் இதற்கு பொறுப்பு? அவர்கள் உயிருடன் இருக்கின்றனரா? இல்லையா? என்ற விபரங்களை உறவினர்களுக்கு தெளிவுப்படுத்துவதும் அது தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுப்பதும் அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

காணாமலாக்கப்படுவது பலரால் செய்யப்பட்டிருக்கலாம். ஆனால் சாட்சியங்களின் அடிப்படையில், கற்றுக்கொண்ட பாடங்களும் நல்லிணக்கத்திற்குமான ஆணைக்குழுவுக்கு முன்னால் வழங்கப்பட்ட சாட்சியங்களின் அடிப்படையில் இறுதி இரண்டு நாட்களில் மூவாயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் அரச படையினரிடம் சரணடைந்தனர் என்று அரசாங்கம் நியமித்த ஆணைக்குழுவினாலேயே சொல்லப்பட்டுள்ளது. அவர்களுக்கு என்ன நடந்தது என்பதனை வெளிப்படுத்த வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும் என்றார். (ம-7,10)

## ஏற்று...

மான இலங்கை காலநிலை மாற்ற மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைக் கூறினார்.

சுற்றாடல் மற்றும் காலநிலை மாற்றத்திற்காக ஒரேயொரு பொதுச்சட்டம் கொண்டு வரப்படும் என இதன்போது ஜனாதிபதி தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதாரக் கொள்கைகளை வகுக்கும்போது, ஏற்றுமதி சார்ந்த போட்டிப் பொருளாதாரம் மாத்திரமன்றி, 2050ஆம் ஆண்டளவில் பூஜ்ஜிய உமிழ்வை அடையும் பசுமைப் பொருளாதாரமாக மாற்றியமைப்பதிலும் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளதாக ஜனாதிபதி கூறினார்.

கடந்த சில நாட்களாக இலங்கை எதிர்நோக்கும் கடும் வெப்பமானது எதிர்கால காலநிலை மாற்றத்தின் அடையாளமென சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, காலநிலை மாற்றத்தைத் தணிக்க உடனடி கவனம் செலுத்த வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார். (ம-7,10)


மஹஜன சம்பத — திகதி 2024.05.08 — சீட்டிழுப்பு இலக்கம் 5469 — K 2 6 3 8 8 2
அத சம்பத — K 3 8 8 2 — சீட்டிழுப்பு இலக்கம் 44 — National Lotteries Board

தன நிதானய — திகதி 2024.05.08 — சீட்டிழுப்பு இலக்கம் 1499 — O 17 30 46 73 O — Double Chance 64341

மெகா பவர் — திகதி 08.05.2024 — சீட்டிழுப்பு இலக்கம் 1817 — U 24 37 52 60 63 — 47582

லக்கி 7 VIP — திகதி 2024.05.08 — சீட்டிழுப்பு இலக்கம் 0295 — H 3 7 4 1 5 4 H

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3711 — சீட்டிழுப்பு திகதி 08.05.2024 — T 23 30 63 70 — T 00602

HANDAHANA — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2024.05.08 — சீட்டிழுப்பு இலக்கம் 0778 — கும்பம் 05 43 57 61 கும்பம் — 00353 — 08

சுப்பர் பன சம்பத — உத்தியோகபூர்வ முடிவுகள் — 08.05.2024 — வெற்றி வாரம் 177 — வர்ணம் பச்சை — L 2 6 7 5 3 5 — Z 06114 — அடுத்த சுப்பர் ஜக்பொட் 21,895,776.00

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2443 — வர்ணம் சிவப்பு — 08.05.2024 புதன்கிழமை — 34 43 49 71 I — 99358 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 87,301,603.20

சனிதா — திகதி 2024.05.08 — வெற்றி வாரம் 4604 — 36 44 51 61 Z — 45172 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.58,188,494.40

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4155 — வர்ணம் பச்சை — சீட்டிழுப்பு திகதி 2024.05.08 — தினம் புதன்கிழமை — 21 48 49 62 விருச்சிகம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 7,925,593.20 — 739431

ஜய — V 10 09 17 23 62 — 1619 — 833971 — 08.05.2024 புதன்கிழமை — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 521,530,341.40


ஜயோதா Jayoda — திகதி 2024.05.08 — வெற்றி வாரம் 2023 — வர்ணம் மஞ்சள் — 04 27 50 53 F — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.23,340,977.60 — 35586

அட கோடிபதி ADA KOTIPATHI — புதன்கிழமை — வெற்றி வாரம் 2269 — சீட்டிழுப்பு திகதி 2024.05.08 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.111,570,948/- — 26 27 47 72 V — 106442

DLB — அபிவிருத்தி லொத்தர் சபை — வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிட்டிஷ் அரசின் உயர்மட்டக் குழுவுடன் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் சந்திப்பு



பிரித்தானிய வெளிவிவகார, பொதுநலவாய மற்றும் அபிவிருத்தி அலுவலகத்தின் இந்து-பசுபிக் பிராந்திய பணிப்பாளர் பென் மேலருக்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கும் இடையிலான விசேட சந்திப்பொன்று நேற்று கொழும்பில் இடம் பெற்றது.

இச்சந்திப்பில் இலங்கை தற்போது எதிர்நோக்கும் வங்குரோத்து நிலை குறித்து இரு தரப்பினருக்கும் இடையில் நீண்ட நேரம் கலந்துரையாடப்பட்டதுடன், இதில் இருந்து விடுபட தாம் மற்றும் தமது குழுவினர் மேற்கொள்ளும் திட்டங்கள் குறித்து எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச விளக்கினார்.

அதேபோன்று தற்போதைய அரசாங்கத்தின் படுமோசமான ஆட்சியை முடிவுக்கு கொண்டு வந்து, மக்கள் சார் ஆட்சியை எதிர்பார்க்கும், மக்களின் ஜனநாயக உரிமைகளை இல்லாதொழித்து தேர்தலை ஒத்திவைக்கும் அரசாங்கத்தின் முயற்சியை தோற்கடிக்க வேண்டும் எனவும், மக்கள் எதிர்பார்க்கும் ஆட்சியை உருவாக்குவதே தனதும் தனது குழுவினதும் நோக்கமாகும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச பிரித்தானிய வெளிவிவகார, பொதுநலவாய மற்றும் அபிவிருத்தி அலுவலகத்தின் இந்து பசுபிக் பிராந்திய பணிப்பாளர் பென் மேலர் உள்ளிட்ட தூதுக்குழுவிடம் சுட்டிக்காட்டினார்.

பிரித்தானிய வெளிவிவகார, பொதுநலவாய மற்றும் அபிவிருத்தி அலுவலகத்தின் இலங்கைப் பிரதானி Humairaa Hatia மற்றும் இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் அன்ட்ரூ பெட்ரிக், முதல் செயலாளர் டொம் சோப்பர் ஆகியோரும் இந்த சந்திப்பில் கலந்துகொண்டனர். மேலும், ஐக்கிய மக்கள் சக்தியைப் பிரதிநிதித்துவப்படுத்தி எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, நிரோஷன் பெரேரா ஆகியோர் இதில் கலந்து கொண்டனர்.

(ம-7,10)

## தமிழ்...

யின் ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்ற பிறகு இந்த 123 பேரில் 11 பேர் தடுத்து வைக்கப்பட்டதாகக் கூறி, 'சித்திரவதைகள் மற்றும் வன்முறைகளில் காணாமல் போன தமிழர்கள் 2015-2022" என்ற தலைப்பில் இன்று வியாழக்கிழமை வெளியிடப்படவுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்டதாகக் கூறப்பட்டவர்கள், பிரித்தானியாவில் புகலிடம் கோரி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் பாதுகாப்புத் துறை சீர்திருத்தங்களைக் கையாள்வதற்கும், தமிழர்களுக்கு எதிரான இந்த வன்முறைக் கலாசாரத்திற்கு காரணமான அதிகாரிகளை வேரறுப்பதற்கும் சர்வதேச சமூகம் இலங்கை மீது அதிக அழுத்தத்தை பிரயோகிக்காத வரையில் இந்த சம்பவங்கள் நிறுத்தப்பட வாய்ப்பில்லை என சர்வதேச உண்மை மற்றும் நீதித் திட்டத்தின் (ITJP) நிறைவேற்றுப் பணிப்பாளர் யாஸ்மின் சூக்கா தெரிவித்துள்ளார்.

இந்த அறிக்கை குறித்து ரொய்ட்டர்ஸிடம் கருத்துரைத்த இலங்கையின் வெளியுறவுத்துறை இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய, யுத்தம் முடிவடைந்த பின்னர், மனித உரிமைகள் பிரச்சினைகளை நிவர்த்தி செய்வதற்காக, தமிழர்களுக்கு காணிகளை விடுவிப்பது, இராணுவத்தை முகாம்களுக்கு மட்டுப்படுத்துவது உள்ளிட்ட நல்லிணக்கத்தை மேம்படுத்தும் பல நடவடிக்கைகளை இலங்கை எடுத்துள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் வடக்கு மற்றும் கிழக்கில், மற்றும் காணாமற்போனதாகக் கூறப்படும் மக்கள் தொடர்பான வழக்குகளை ஆராய அதிகாரிகளும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முன்வைக்கப்பட்டுள்ள உண்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்திற்கான ஆணைக்குழுவொன்றை நியமிப்பதற்கு இலங்கையும் செயற்பட்டு வருவதாக அவர் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,10)

## இலங்கையின்...

யின் கடன் சுமையை 17 பில்லியன் அமெரிக்க டொலர்களால் குறைக்க முடியும் என்றும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் கடன் தவணையைப் பெற்ற பின்னர் நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகளைத் தொடர முடியும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி இதனைத் தெரிவித்தார்.

இலங்கை அணிசேரா வெளிநாட்டுக் கொள்கையைப் பின்பற்றி அனைத்து நாடுகளுடனும் உறவுகளைப் பேணி இலங்கையின் இறையாண்மையைப் பாதுகாத்து வருவதனால் இலங்கைக்கு பல சலுகைகள் கிடைத்து வருவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

சீனா மற்றும் இந்தியாவுடன் நெருக்கமான உறவுகளைப் பேணி இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு அவர்களின் ஆதரவைப் பெறுவதற்கு அரசாங்கம் செயற்பட்டுள்ளதாகவும் அமைச்சர் அலி சப்ரி மேலும் சுட்டிக்காட்டினார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த அமைச்சர்,

"அணிசேரா வெளிநாட்டுக் கொள்கையைப் பேணுவதுடன் அனைத்து நாடுகளுடனும் நல்ல உறவு முறையை இலங்கை பேணி வருகிறது. இலங்கையின் இறையாண்மையைப் பாதுகாத்து ஒவ்வொரு நாட்டுடனும் சிறப்பான தொடர்புகளைப் பேணுவது, வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பதை எளிதாக்கியது.

சீனா, ஜப்பான், இந்தியா மற்றும் பெரிஸ் கிளப் ஆகியவை கடன் மறுசீரமைப்பிற்கு பெரும் ஆதரவை வழங்கின. சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் தவணையைப் பெற்ற பின்னர் நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகளைத் தொடர முடியும்.

சீனாவுடனும் இந்தியாவுடனும் எமக்கு நெருங்கிய உறவை ஏற்படுத்த முடிந்துள்ளது. சீனாவுடன் ஒன்பது புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன. இந்தியாவைச் சேர்ந்த முதலீட்டாளர்கள் இலங்கையில் அதிகளவில் முதலீடு செய்ய ஆர்வம் காட்டுகிறார்கள். குறிப்பாக புதுப்பிக்கத்தக்க வலுசக்தி உற்பத்தியில் முதலீடு செய்ய அதானி நிறுவனம் முன்வந்துள்ளது. மேலும் இலங்கையில் முதலீடுகள் செய்வது குறித்து சவுதி அரேபியாவும் கவனம் செலுத்தியுள்ளது.

குறிப்பாக மத்திய கிழக்கு நாடுகள் தங்களது எரிபொருள் சார்ந்த பொருளாதாரத்தை தாண்டி ஏனைய நாடுகளில் முதலீட்டு வாய்ப்புகளை உருவாக்கி தங்கள் நாடுகளின் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்த எதிர்பார்க்கின்றன. அதனை இலங்கைக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள நாம் நடவடிக்கை எடுக்கின்றோம்.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சு சர்வதேச விதிகளுக்கு அமைய வெளிநாடுகளுடன் உறவுகளைப் பேணி வருவதால், ஈரான் ஜனாதிபதியின் இலங்கை விஜயம் தொடர்பில் சர்வதேச சமூகத்திற்கு எவ்வித பிரச்சினையும் ஏற்படவில்லை. ஈரான் வழங்கிய உமா ஓயா திட்டமானது அடுத்த மாதம் முதல் தேசிய மின்சார கட்டமைப்பில் 120 மெகாவொட் மின்சாரத்தை வழங்கும். இதன் மூலம் அடுத்த மாதம் மின்கட்டண திருத்தத்தின் போது இதன் பலன் மக்களுக்கு கிடைக்கும் என்றார்

(ம-7,10)

## துப்பாக்கி...

அடையாளம் தெரியாத நபர்களினால் நடாத்தப்பட்ட துப்பாக்கி பிரயோகத்தில் காயமடைந்த நபர் பலபிட்டிய வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

துப்பாக்கி பிரயோகம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ம-7,10)

CANADA VISA
உங்கள் குடும்பத்துடன் பயணிக்கலாம்.
வங்கி வசதிகள் செய்து தரப்படும்.
20 வருட அனுபவம், 1800 பேரை அனுப்பி வைத்துள்ளோம்.
கிடைத்தவர்களை நேரடியாகப் பார்வையிடலாம். (511)
021 222 5686
076 424 7111
Expo Net Overseas Consultants
345, Kasthuriyar Road, Jaffna.

V2 VISA SERVICES
கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-0319)

காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் சுன்னாகம் மின்சார நிலைய வீதியில் 31 பரப்பு காணி விற்பனைக்குண்டு.
◆ 15 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்டுள்ளது.
◆ குடியிருப்புக்கள் சூழ உள்ள பகுதி
◆ சுன்னாகம் நகரம் 1 Km
◆ ஒரு பரப்பின் விலை 15 இலட்சம் தொடக்கம் 20 இலட்சம் வரை உள்ளது.
◆ தரகர் தேவையில்லை.
(697)
077 88 62 927

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும்.
(C-0318) 076 825 7716 (ஆகாஸ்)

உடனடி வேலை வாய்ப்புக்கள்
EXECUTIVE OFFICER
✔ சம்பளம் - 25000/= தொடக்கம் 50000/=
(நிபந்தனைகளுக்கு உட்பட்டது)
✔ வயது-22 தொடக்கம் 35
✔ தகுதி- பட்டதாரிகள் (C-0319)
(ஆங்கில அறிவு அவசியமானது)
V2 TRAVELS
AIRTICKETING, VISA SERVICES, INTERNATIONAL COURIER
போன்ற துறைகளில் பயிற்சி அளித்து உடனடி வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும்
49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம்
0777-068-777

கணக்கு இலிகிதர் தேவை
யாழ் நகரில் அமைந்துள்ள தனியார் நிறுவனத்திற்கு கணக்கு இலிகிதர் தேவை. (கணக்கியல் துறையில் அனுபவம் உடைய 25 - 35 வயதிற்குட்பட்ட ஆண்கள்) கீழ்க்காணும் முகவரிக்கு சுயவிருப்பங்களுடன் விண்ணப்பிக்கவும்.
விண்ணப்பிக்க வேண்டிய முகவரி :
வ.வ.இராமசாமிப்பிள்ளை & சன்ஸ்
இல.58, குறுக்குத்தெரு நல்லூர்,
யாழ்ப்பாணம்.
(701)

கண்ணீர் அஞ்சலி
எமது கல்லூரி நண்பன்
ஸ்ரீகந்தபாலன் ராஜ்ராம் அவர்களின் அன்புத் தாயார்
திருமதி ஸ்ரீகந்தபாலன்
சறோஜினிதேவி
அவர்கள் சிவபதம் அடைந்ததையிட்டு நண்பனுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
பிரிவால் துயருறும்
யாழ் இந்துக் கல்லூரி
A/L 1995 நண்பர்கள்
(6900)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.05.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.